திரு சிவம் பரமலிங்கமும் அவரது மகள்
நிலாவும் எழுதிய கவிதைகள்

எந்தையும் யானும்

பதிப்புரிமை ஆசிரியர்க்கே
தொலைபேசி : 00442087955838
மின்னஞ்சல் :
nilaaa2001@yahoo.co.uk
இணையத்தளம் :
www.nilamutram.com

கணபதி துணை

சித்தி வினாயகனே!

ஆதி பரம் பொருளே - உலகாளும்
ஆனைமுக, நாயகனே!

சிந்தையில் நிற்பவனே - எங்களின்
சித்தி வினாயகனே!

கல்வியைத் தருபவனே - எப்போதும்,மனக்
கண்களைத் திறப்பவனே!

கற்பனை வளர்ப்பவனே - போற்றிக்
கவி பாட வைப்பவனே!

எண்ணங்கள் கூடுதையா - காவிய
வண்ணங்கள் சேருதையா!

என்மனம் கூவுதையா - உந்தன்
பொன்கழல் பரவுதையா!

உன்கண்கள் திறவுமையா - என்மனக்
கண்களை விரியுமையா!

உன்னையே கெஞ்சுகின்றேன் - கவிதைக்கு
உறுதுணை தாருமையா!

முன்னுரை

அரியாலையூர் அம்புயத்தின் கவிதைகளை லண்டனில்
வானொலியிலும் தொலைக்காட்சியிலும் நான் கேட்டதுண்டு.
நவஜோதி ஜோகரட்னத்தின் "எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்"
கவிதை நூல் வெளியீட்டின் போது வாழ்த்துரைக்க அரியாலை
அம்புயம் மேடையேறிய போது தான் இந்தப் பெணகவி சக்கர
நாற்காலியின் சட்டகங்களில் சிறைப்பட்டிருக்கும் சோகம் தெரிய
வந்தது. உடல் நடமாட்டம் முடக்கப் பட்டிருந்தாலும் காற்றிலேறி
விண்ணை சாடும் வீரியத்தற்கு இவரிடம் பஞ்சமில்லை.
ககனவெளியில் கற்பனைச் சிறகை விரித்துப் பறப்பதற்கு
தடைபோட்டவர்கள் யார்?

கவிதை அரியாலையூர் அம்புயத்துக்கு கைவிளக்காக இருக்கிறது ;
வாழ்க்கையின் குரூரங்கள் முகத்தில் மோதி அறையும் போது
கவிதை அவருக்கு ஊக்க மாத்திரைகளாக இருக்கின்றன;
தாமசத்தில் அமிழ்ந்து விடும்போது கரையேற்றும்
தோணிகளாகின்றன; சோர்வை, வெறுமையை, விரக்தியை,
நிராசையைத் துடைத்தெறியும் கைக்குட்டையாக இருக்கிறது. அதல
பாதாளச் சமவெளிகளில் தள்ளாடும் போது அவருக்கு
ஊன்றுகோலாக இருந்திருக்கிறது.

"ஏன் இந்த வாழ்வு?
ஏதற்காக விடிவு? "

என்று ஒரு கவிதையில் மனம் வெதும்புகிறார் அம்புயம்.

"எண்ணங்கள் மோதும் வேளை
இயங்க மறுக்கும் எனது அவயவங்கள்
அதனால்
எனக்கு எழுத இல்லை வரம்"

என்று கூறிவிட்டு எழுத்துவரம் வாங்கி வந்திருக்கிறார் அம்புயம்.

அம்புயத்திற்கு கவிதை உணர்வுகளின், எண்ண வெளிப்பாடுகளின், சமூக ஆதங்கங்களிலும் வடிகாலாகத் திகழ்கிறது.

தமிழ் சமூகம் ஆழ்ந்த குடும்பப் பிணைப்பில் வேரோடியுள்ளது. அந்த உறவுப்பந்தங்கள் தான் வாழ்வின் நம்பிக்கைளுக்கு, சுகங்களுக்கு, சந்தோஷங்களுக்கு ஆதாரக் கோலங்கள் தீட்டுகின்றன. இந்த உறவுப்பந்தத்தில் அன்னையும் தந்தையும் முக்கிய கண்ணிகளாகத் திகழ்கின்றன. அரியாலையின் கல்விப்புலமை கொண்ட குடும்பத்தின் கடைக்குட்டியான அம்புயம் தன் தாயின் மீதான பாசத்தை பலகவிதைகளில் பொழிந்திருக்கிறார்.

அருவமான போதும் அருகிருந்து காக்க வேண்டும் என்று மறைந்த தந்தைக்கு அழைப்பு விடும் இளையமகளின் இதய தாபத்தை ஒரு கவிதை விபரிக்கிறது.

அரியாலையின் தன் நாற்சார் வீட்டில் முற்றத்து அம்பலவியையும் மல்லிகையையும் நினைவு கூந்து அம்மா ஆக்கித்தந்த கொழும்புத்துறை மீனிலும் ஊரரிசிச் சோறிலும் திளைத்துப் போன நினைவில் தெறித்திருக்கும் "எனது வீடு" கவிதை அனுபவம் புலம் பெயர்ந்து வாழ் நம் அனைவரின் இரசிப்புக்கும் உரியது தான்.

அரியாலை அம்புயத்தின் பெரும்பாலான கவிதைகள் தன்னுணர்வுக் கவிதைகளாகவே அமைந்துள்ள போதிலும் சமூகப்பொதுவான துயரங்களையும் அவை சுமந்தே வருகின்றன. தமிழ்ப்பிரதேசங்களில் இராணுவக், கெடுபிடிகளின் மத்தியில் காணாமல் போவோர் எண்ணிக்கை நாளும் பொழுதும் அதிகரித்த வண்ணமே உள்ளது. மூன்று வேலிகள் தள்ளிய வீட்டிலிருந்து சுதாகரன் என்ற இளைஞர் காணாமல் போன துயரத்தை அம்புயம் அழியாத கவிதையாக்கி இருக்கிறார்.
கறுத்த ஜூலைகள், இனப்படுகொலைகள், ஆனையிறவுத் தாக்குதல், மாவீரர் தினம் போன்ற அரசியல் நிகழ்வுகளும் அம்புயத்தின் கவிதை பதிவாகியுள்ளன. "நிலையான தீர்வே தமிழீழமென நின்றாய்" என்று தமிழீழத் தேசியபிதா தந்தை செல்வாவிற்கு அஞ்சலி கூறுகிறார் அம்புயம்.

அம்புயத்தின் கவியுள்ளம் மனிதர் தம்மை மனிதார் வருத்தும் கொடூரம் கண்டு கொதித்த அதேவேளை இயற்கையின் சீற்றம்

எழுப்பிய அவலம் குறித்தும் பதைபதைக்கிறது. குஜராத்தை பலியெடுத்த பூகம்பமும் சுனாமி எனக் கடலன்னை கொதித்த கொடூரமும் அம்புயத்தின் கவிநெஞ்சைப் பாதித்துள்ளன.

அம்புயம் உலா வர அனுமதிக்கப்பட்ட எல்லைகள் வரையறுக்கப்பட்ட போதும், எங்கெங்கு துயரங்கள் கவிந்தனவோ அங்கெங்கெல்லாம் அவரது கவியுள்ளம் எல்லை கடந்து வியாபித்துள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரியில் விஞ்ஞானக்கல்வி பயின்ற உதயகுமாரி கவியுலகில் அரியாலையூர் அம்புயமாக வடிவெடுத்திருக்கிறார்.

கணிதத்தில் தேர்ச்சிமிக்க உதயகுமாரி கணிதபாட போதனையிலும் ஆரம்பத்தில் ஈடுபட்டிருக்கிறார். லண்டன் வந்தபின் மிட்ல்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் கணனி வலைப்பின்னல் நுண்முறைப்பயிற்சி நெறியில் பட்டமும் பெற்ற உதயகுமாரி நம்பிக்கைச் சுடராக நிலையூன்றி நிற்கிறார். வானொலிகளும் தொலைக்காட்சிகளும் இவரது ஆர்வத்தை ஈர்த்திடும் சாதனங்களாக அமைந்திருக்கின்றன.

தமிழ் வானொலிகளிலும் தொலைக்காட்சிகளிலும் கவிதை நிகழ்ச்சிகள் பெரும் வரவேற்புப் பெற்று வருவதைப் புலம்பெயர் நாடுகளில் அவதானிக்க முடிகிறது. ஐ.பி.சி யின் " பிரசவகளம் " லண்டன் தமிழ் ரேடியோ ஆகியன நம்மவர் மத்தியில் கவிதை எழுதும் ஆற்றல் நிறைந்து கிடப்பதை வெளிப்படுத்தியுள்ளன. சமூக, அரசியல் நிகழ்வுகள் குறித்து கவிதைகள் ஏந்திவரப் பெரும் கவிஞரணியே காத்துக்கிடப்பதைக் காணமுடிகிறது. வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வாழ்த்தும் பல மாமூல் கவிதைகளும் இத்தொகுப்பில் காணப்படுகின்றன. கணனி வழி விரியும் தொடர்பாடலிலும் கவிதைகள் இன்று முக்கியம் பெற்று வருகின்றன. இணையத்திற்கூடாக எழுதப்பட்ட கவிதைகள் அச்சு உலகத்தை மீறி கவிதைகள் வேறொரு தளத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதை உணர்த்துகின்றன.

"எந்தையும் யானும்" என்ற இந்தத் தொகுப்பு தந்தையும் மகளும் எழுதிய கவிதைகளின் தொகுப்பாக வந்திருப்பது அபூர்வமானதாகும். யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியில் பயின்ற சிவம் பரமலிங்கம் எழுதுவினைஞராக யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற பல இடங்களில் நீர்ப்பாசனத் திணைக்களம், நில

அளவைத்திணைக்களம் ஆகியவற்றில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். 83 இனக்கலவரத்தின் பின் லண்டன் வந்து சேர்ந்த சிவம் பரமலிங்கம் நல்லூர்க் கந்தனையும் கவிதையும் துணையாகக் கொண்டிருக்கின்றார். உலகின் பொய்மைகளும் புன்மைகளும் அநீதிகளும் தலைவிரித்தாடிய சூழலில் யாரை நம்புவது? யாரை நாம் போற்றுவது என்று மனம் தத்தளிக்கிறார். வேளைக்கு ஒரு வேடமிடும் போலிகளின் நிலை குறித்து விசனிக்கின்றார். நாடெங்கும் நிலவும் அராஜகங்கள் "நீதி நிலைக்குமோ இனி" என்று அவரின் நெஞ்சிலும் கேள்வி எழுப்பவே செய்கிறது.

யாழ்ப்பாணத்தின் கடந்த கால எழுதுவினைஞர்கள் வித்தியாசமான சமூகத் தோற்றப்பாடாகத் திகழ்ந்தனர். கடமை, அர்ப்பணிப்பு, ஒழுங்கு, நேரம் தவறாமை, நேர்மை, அளவான வாழ்க்கைத்தர நிர்ணயம் போன்றன இந்த எழுதுவினைஞர்களின் சிறந்த அம்சங்களாகத் திகழ்ந்திருக்கின்றன. பழுப்பேறிய கச்சேரிக் கோவைகளில் காலம் கடத்திய ஒரு எழுதுவினைஞரின் நெஞ்சிலே கவிதை களிநடம் புரிந்திருப்பதை இக்கவிதைத் தொகுப்பு எடுத்துக் காட்டுகிறது.

அவையத்து முந்தியிருக்கச் செய்த தந்தையின் கவிப்பயணத்தில் கடைக்குட்டி அம்புயமும் பயணித்திருக்கிறார். அவரது கவிப்பயணம் தொடர என் வாழ்த்துக்கள்.

மு. நித்தியானந்தன்

113 Landsbury Drive
Hayes, Middlesex
UB4 8RP
UK
15/10/06

அணிந்துரை

சொற்கூட்டிப் பொருள் அமைத்துப் புனைந்திடும் கவிதைகள் எப்போதும் பயன் தருபவை. மனதிற்குப் புத்துணர்ச்சி சேர்ப்பவை. கவிதைகளோடு வாழ்தலென்பது பெருஞ் செல்வத்தையொத்தது. அக்கவிதைகளையே எழுதிடும் ஆற்றல் கைவரப் பெற்றவர்கள் பெருஞ் செல்வந்தர்களே. இக்கவிதை நூலிலும் தந்தையும் மகளும் இணைந்து தந்திடும் கவித்துளிகள் மதிப்புமிக்க பொற்குவியல்களாகத் தென்படுகின்றன.

கவிதைகள் யாவும் மரபுக் கவிதைகளாக இருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றன. காத்திரமானவையென்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. அமரர் திரு சிவம் பரமலிங்கம் அவர்களின் வாழ்வின் முதிர்ச்சி, அதனூடாக வெளிப்படும் அனுபவத்தெளிவு, சகல உணர்வுகளையும் உள்வாங்கும் லாவண்யம் யாவும் கவிதைகளை அழகு செய்கின்றன. நிலாவின் கவிதைகள் யதார்த்தத்துடன் இணைந்து, சமகால நிகழ்வுகளின் பதிவுகளாகின்றன.

"ஆசைக்கு அடிபணியார்", "உத்தமர் என்பவர் யார்" ஆகிய இரு கவிதைகளும் தத்துவார்த்தப் பொருளுடையவை. "ஆசைக்கு ஏதாச்சும் வயதுண்டா?" என்பது நல்லதொரு சிந்தனைத்துளி. "உலகினில் உழல்கின்ற உயிர்களே பொய்யடா" எனத் தொடங்கி வாழ்வின் சகல அம்சங்களும், பற்றுக்களும் பொய்யெனச் சொல்வது வாழ்வின் அர்த்தத்தை உணர வைப்பதாக உள்ளன. இவ்வாறே ஒவ்வொரு கவிதைகளிலும் ஒவ்வொரு நல்ல அம்சத்தைக் காண்கிறோம். திரு சிவம் பரமலிங்கம் தனது வாழ்நாளில் ஒரு சிறந்த மனிதராக, நல்லவராக வாழ்ந்தாரென்பதனை "நீதி நிலைக்குமோ இனி" கவிதையூடே காணலாம்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாவலர் துரையப்பாபிள்ளையின் சீர்திருத்தப் பாடல்களையொத்துப் பலரும் பின்னர் கவிதைகள் எழுதியுள்ளனர். "மாறுமா" எனும் கவிதை அவனுபவத்தையே தருகின்றது. "என்ன சுகம் கண்டோம்" எனும் கவிதை புலம்பெயர் தமிழன் ஒவ்வொருவனிடமும் மனத்தெழும் கேள்வியாகவுள்ளது.

தந்தையின் எழுத்துகளைச் சேகரித்து வைத்து நூல் வடிவாக்கும் மகள் நிலாவை நினைக்கும் தோறும் "எந் நோற்றான் கொல்" எனும் குறள்வரியே ஞாபகம் வரும். தந்தையைப் போலவே சிறப்பான கவிதைகளைத் தந்திருக்கும் இவருக்கு கவிதை கைவரப்பெற்றுள்ளது. நல்லவற்றை மனம் விரும்பி வாழ்த்துவது, இறைவனைத் துதித்து நிற்பது, காதலைத் தாபத்துடன் வெளியிடுவது, பெற்ற தாய் தந்தையின் நினைவில் தோய்வது, போராட்ட வாழ்வியலைப் பதிவு செய்வது, மனவுணர்வுகளுக்கு வடிகால் தேடுவதெனப் பல்வேறு அம்சங்களையும் தன் கவிதைகளில் இவர் சொல்லியிருக்கின்றார்.

"எனது வீடு" எனம் கவிதை இவரின் மலரும் நினைவாக, ஒரு திரைப்படக் காட்சியாக மனக்கண்ணில் தோன்றுகிறது. "வெறுப்பு நினைவுகள் தேயட்டுமே", "பெய்யாத மழைமுகிலாய் சொல்லாத காதல்களும் பிடிக்கவில்லை" என வரும் கவிவரிகள் இவரின் ஆளுமைக்குச் சான்றுகளாகின்றன. பலகவிதைகளில் நிலாவின் கற்பனைத் திறனை, சொற்சேர்க்கும் நேர்த்தியை, கையாளும் சந்தத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டுள்ளேன். மேன் மேலும் சமுதாய அக்கறையுள்ள, புலம்பெயர் வாழ்வு அனுபவங்களைத் தாங்கியுள்ள, பெண்கள் சார்பான உணர்வுகளைச் சொல்லுகின்ற கவிதைகளை ஆக்கிட வேண்டுமென விரும்புகின்றேன்.

நிறைவாக உதயகுமாரி என்ற இயற்பெயர் கொண்ட நிலா இயற்கையாகவே கவித்துவம் மிக்கவர். பழகியதில் இனிமையானவர். தன்னம்பிக்கையும் முயற்சியும் இரண்டறப் பெற்றவர். அனுபவங்களை உள்வாங்கியவர். எழுத்துக்களை நேசிப்பவர். தந்தையின் கவிப்பயணத்தில் தானும் இணைந்து மகிழ்வு காண்பவர். இலக்கியத்தை விருப்புடன் அனுபவிக்கும் இவர், இத்துறையில் தொடர்ந்தும் எழுதிவரச் சிறப்புற வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

அன்புடன்
திருமதி மாதவி சிவலீலன்

607, WHITTON AV WEST
GREENFORD
MIDDLESEX, UB6 ODZ, UK

நிலா நினைப்பது

இறைவன் தாள் வணங்கி நான் எழுதும் இந்த உரையானது பலரையும் துக்கத்துக்கு உள்ளாக்கலாம். அதற்காக என்னால் உண்மையை எழுதாமல் இருக்க முடியவில்லை. எந்த ஒரு பாராட்டையும் ஒருவர் உயிருடன் உள்ளபோதே தெரிவிக்க வேண்டும் என பிடிப்புள்ள நான் வாய் தவறியோ என்னவோ 'அப்பா உயிருள்ளபோதே அவரது கவிதைகளை தொகுத்து கௌரவப் படுத்தவேண்டும்' என்று யாருக்கோ கூறியது நினைவிலிருக்கிறது.

ஆயிரத்து தொளாயிரத்துத் தொன்னூற்றெட்டில், இந்த நாட்டுக்கு புதியவள் நானாக இருந்த போது புதிய சூழல், புதிய மனிதர்கள், என் உடல்நிலை தந்த சிரமங்கள் சவாலாக இருந்த அந்த நிலையில் என்னால் அதைச் செயற்படுத்த முடியவில்லை.

மேலும் என் விருப்பத்தை என் தந்தையிடம் தெரிவித்த வேளை 'அதெல்லாம் செய்யலாம். உனது கவிதைகளும் அதில் சேர்ந்து வரட்டும்' என்று எனது தந்தை கூறிவிட்டார்.

அப்போது என்னிடம் ஆக்கங்கள் அதிகம் இல்லாத போதும் நான் வாழ்ந்த சூழலில் அப்பாவிடம் ஒருபகுதியைப் பெற்று கணனியில் பதிவு செய்தேன்.

அதற்குப் பிறகு நான் எனது வாழ்க்கையோட்டத்தில் முன்னேற்றத்தின் மீதுள்ள கவனிப்பாலும் அம்மாவும் லண்டன் வரட்டுமே என்றும் இருந்தேன். வந்த சில காலங்களில் எனது பெற்றோரின் கனவின் நிமித்தம் இந்த லண்டன் மாநகரத்தில் சக்கர நாற்காலியில் உழல்பவளாகிய நான் கிடைத்த பெரிய பேறான உயர் கல்வியின் காரணமாக பல்கலைக் கழகம் போகும் காலம் அமைந்தது.
இந்த காலகட்டத்தில் இந்தியா போகும் வாய்ப்புக்கிட்டியது. போய் அங்கு நானும் அம்மாவும் சிற்றூநது விபத்தொன்றுக்கு ஆளாகி குணம்பெற்று இங்கு வந்து சுதாகரிக்கு முன்பாக வந்த ஒருமாதத்தில் அப்பாவும் நோய்ப்பட்டு மூன்று வாரங்களில் இறைவனடி சேர்ந்து விட்டார். இது நடந்தது இரண்டாயிரத்து மூன்றில். என்வாயின் சொல் இப்படிப் பலித்ததோ!

அதன்பின் என்படிப்பை முடித்து புதிய இடத்தில் நானும் அம்மாவும் வாழத்தொடங்கி ஒரு வருடம் தானாகிறது. என் தந்தையும் நானும் எழுதிய கவிதைகளை எந்தையும் யானும் என்ற தலைப்பில் வெளியிட அமைந்த இந்த வாய்ப்பானது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பேறு.

அதேநேரம் அழுத்தங்கள் உள்ள வாழ்நாடகள் எனக்கமையாமல் இருந்திருந்தால் இன்னும் உணர்வு கலந்த பல பக்கங்களையும் தொட்டு கவிதைகளாய் ஆக்கியிருக்க முடியுமோவென ஆதங்கப்படுகிறேன்.

என்னை ஒரு புத்தகம் ஆக்கும் நிலைக்கு எனது இணையத்து நண்பர்களும் சன்றைஸ், லண்டன் தமிழ் வானொலி திரு நடாமோகனும் தான் காரணம் என்று இத்தருணம் கூறாமல் நகர்ந்தால் நான் நன்றி மறந்தவள்.

ஓன்று மட்டுமுண்மை நானோ அப்பாவோ தமிழை ஆழ்ந்து பயின்றவர்களல்ல. உங்கள் விமர்சனங்கள், அறிவுரைகள் என்னை வளர்க்கலாம்.

இத்தனையையும் உங்கள் முன் சமர்ப்பிக்கக் காரணமான எம்மை தந்தையாகவும் பின்பு அன்னையாகவும் காத்த அப்பா, தோழியாகவே என்னுணர்வுகளைப் புரிந்து எனை ஆளாக்கிய அம்மா, கடைக்குட்டியாக எனை ஆதரித்து, என் உணர்வுக்கும் சொல்லுக்கும் ஆட்சேபணை தெரிவிக்காமல் அன்பு காட்டும் உடன்பிறப்புகளுக்கும் என்னை அன்பு காட்டும் இரத்த உறவுகளுக்கும், அன்பால் ஏந்தித் தாங்கும் அன்புள்ளங்களுக்கும் நான் மனம் நெகிழ்ந்து நன்றி சுற விரும்புகிறேன்.

தங்கள் அன்புக்குரிய
உதயகுமாரி பரமலிங்கம்
(நிலா)

Flat1, Ithell Court
18, Crawford Avenue
Wembley
London HA0 2HW
U.K

இணையத்து தமிழுறவின் எண்ணவானில்..

பத்திரிகை வாழ்வின் பல்லாண்டுப் பணியில் பல்வேறு துறையினரைக் கண்ட நான் இந்த அபூர்வ பிறவியைச் சந்திக்கும் இனிய வாய்ப்பை இணையம் உருவாக்கித் தந்திடப்பெற்றேன். உலக விவகாரங்களை அறிய இணையத்தில் நுழைந்த சமயங்களில் தமிழ் உறவுகளுடன் உரையாடலாமேயென யாஹோ இணையத் தளத்துக்கு செல்வதுண்டு. ஒருநாள் குயிலொன்று இன்பத்தமிழில் ஒரு கவி பாடிக் கொண்டிருந்தது.

அந்தக் கவியின் வரிகளில் இன்பத்தமிழ், இலட்சியம், தமிழ்த்தேசியம், கடமை மற்றும் தன்னம்பிக்கை உணர்வுகளை அவதானிக்கக் கூடியதாயிருந்தது. இந்தக் கவிதாயினி யார் என்று அறிய முற்பட்டபோது ஈழமண்ணில் தோன்றி சீமை வந்தும் தமிழ், தமிழ்த்தேசிய சிந்தனையுடன் வாழும் உதயகுமாரியென்று தெரிய வந்தது. இன்று யாஹோ இணையத்தளத்தில் இவரை அறியாதோர் அரிது. அறிந்தோர்களோ பெரிது. அரைமணி நேரம் போதுமவருக்கு அரிய கவிதையொன்றைப் படைத்திட.

'அன்பு அரண்மனை' என்ற பெயரில் அறை அமைத்து உலகின் பல திசைகளிலும் தமிழ் நண்பர்கள் அளவளாவும் வேளைகளில் ஆஸ்தானக் கவிஞ்ஞை எனவே அழைக்கப்பட்ட இவ காலப்போக்கில் நிலாமுற்றம் என்ற அறையையும் இணையத்தில் அமைத்ததும் அதன் பெயரிலேயே இணையத்தளம் ஆக்கி நிர்வகித்து அது இன்றும் எமது நண்பர்களின் பாலமாக விளங்குவதும் குறிப்பிட வேண்டியது.

நூற்றுக் கணக்கான இவரது சிந்திக்க வைக்கும் கவிதைகளைக் கேட்டு வியந்து நின்ற நாட்கள் பல. சக்கர நாற்காலியில் அமர்ந்து தான் உதயா இந்த அரிய பணியை மேற்கொள்ளுகிறார் என்று அறிந்த போது கண்களில் நீர் மல்கிய நிலையை நினைத்துப் பார்க்கிறேன். உலகின பலபாகங்களிலும் தனக்கென ரசிகர் கூட்டத்தைக் கொண்ட இந்த இலட்சியதேவி இன்னும் இலைமறைகாய்போல் கிடப்பதா?

இன்று வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தன் தமிழ்ப் பணிதொடரும் இவரின் நூல்கள் இன்று தமிழ்த்தாயின்

திருப்பாதங்களில் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றன. உதயாவைச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்புகள் இரண்டிலும் இந்தப் புதுமைப்பெண்ணின் துணிவு தன்னம்பிக்கை என்பன கண்டு நெகிழ்ந்து நின்றேன். பாரதி அன்று கண்ட புதுமைப் பெண்ணை இந்த நிலா (உதயமாரி பரமலிங்கம்) வின் உருவத்தில் கண்டேன். அவரின் தமிழ், சமுதாயப் பணி தொடரட்டும். வாழ்த்துக்கள்.

பாசத்துடன்
அன்ரன் டேவிட்
பத்திரிகையாளர்
வீரகேசரி

அப்பாவின் கவிதைகள்

- ஆசைக்கு அடிபணியார்
- என்ன உலகமடா?
- நீதி நிலைக்குமோ இனி
- காணாமல் போனாயடி
- தாகம்
- ஏன் அழுதாய்?
- மாறுமா?
- பொன்னான நேரம்
- இனி என்ன தடையிருக்கு?
- போர்
- எங்கு தான் காண்பேனடி!
- காணத்துடிக்குதடி கண்ணே!
- உத்தமர் என்பவர் யார்?
- வாணியம்மா
- வெம்பி அழுகின்றாள்
- ஆகும்வழி காண்பாய் நீ!
- என்ன சுகம் கண்டோம்?
- விடிந்தது சித்திரையே!
- அற்புத மகளே கேளம்மா
- மறைக்காமல் சொல்லி விடு
- பூம்பனி புவியிடை தாவியதே
- நாம் காணும் இன்பங்கள்
- சுகம் எங்கே?
- பனிமழை பொழிந்ததம்மா!
- பொங்கலோ பொங்கல்
- மணிவிளக்கு
- நாம் என்ன செய்தோம்?
- உள்ளம் மாறுமா?
- வழியெது தாயே?
- ஆணவம்
- இவள் யார்?
- அயல்நாட்டு மாப்பிள்ளை
- மறப்பேனா?
- காத்திருங்கள் பதம் பார்ப்போம்!

மகள் நிலாவின் கவிதைகள்

- உண்மையிலே உவகை தான்!
- தைமள் வந்தாள்
- காத்திடுவீர் மண்ணை!
- அன்புக்கு அம்மா
- உன்னுரிமை உனதானால் உனக்கேது ஒருதுயரம்
- காலத்தின் கைதிகள்!
- கறுப்பு ஜூலை
- சித்ரா! சித்ரா! சித்ரா!
- இதுவும் காதல் தான்
- அடுத்தது என்ன?
- வெடித்தாளே பூமித்தாய்!
- பொங்கல் நல்வாழ்த்து
- உயிரோடு உறவாக
- சித்திரைப் பெண்ணாள்!
- தீபாவளி வாழ்த்து
- அதுவரை
- தந்தை செல்வா! தமிழின் புதல்வ!
- நல்லைக் கந்தன் திருநாள்
- நிலாமுற்றம்
- அம்மாவுக் கு நிகர்
- பிடிக்கவில்லை!
- பாரதியார் நினைவில்
- வேளைதான் வந்ததா? விதிதான் சிரித்ததா?
- தீபத்தில் தீபாவளி வாழ்த்து
- புதுமொழி
- தீபத்தில் ..
- நோற்பாரே நோன்பு
- காதலி..காதலி!
- மகோன்னதங்களே நீங்கள்!
- மாமனிதன்
- நின்மடியில்
- எழுதவரம்
- அன்புள்ள அப்பா
- காத்திரு கவிதை வந்தது
- எழுந்து வந்தேன்! எழுதிவிட்டேன்!

- இல்லை நாட்டம்!
- விசாலமவள் உள்ளம்!
- இனியும் பிறப்பார்கள் பைத்தியங்கள்!
- கவிதைப் பெண்ணாள்!
- காயமானது என் மனமே!
- நட்பு
- கனிந்து வந்தது கார்த்திகை
- கடலம்மா காணுமம்மா!
- அம்மா! அம்மா!
- மகனிடமிருந்து..
- சுற்று
- உயிருக்கு உறவானாள்!
- சிந்தித்தால் தெளிவு வரும்!
- தம்பி சுதாகரனே!
- விரித்தேன் வலை!
- கானல் நர்
- எனது வீடு
- இனப்படுகொலை
- அப்பாவுக்காக
- எழுதுகோல்
- வாழ்வோமே வளமாக
- காலம் கரைகிறதே!
- சாதனை

ஆசைக்கு அடிபணியார்

தகுதிக்கு மேலாக எண்ணுவதும்
தாமாக மனச்சுமைகள் கூட்டுவதும்
தாங்காது மெய்வருத்தி மாளுவதும் - எமது
தாளாத ஆசையினால் கூடும்வினை.

நன்மைக்கும் ஆசைதான் வித்தென்றால்
தின்மைக்கும் அதுதானே விதையாச்சு!
மனம்தான் ஆசைக்கு தளமென்றால் - எம்
மதியினால் ஆசைதனை மாய்த்தோமா?

ஆசையினால் ஆடாதார் ஆரப்பா?
ஆடியபின் ஆசைதான் அடங்கியதா?
ஆசைக்கு ஏதாச்சும் வயதுண்டா? - அதன்
ஆழத்தை அளந்தார் யாரப்பா?

மனஉறுதி கொண்டவரும் ஆசையினால்
மண்ணுலகில் சிலவேளை அடிபணிவார்.
போதுமென்னும் மனமுள்ள புண்ணியர்கள் - மட்டும்
போதைதரும் ஆசைக்கு அடிபணியார்!

என்ன உலகமடா?

தனக்கொரு கருமமென்றால்
தாமாக வந்திடுவார்!
தயவுடனே கதையளப்பார்
தக்கபடி கெஞ்சிடுவார்!
தருணம் வரும்போது
தம்வழி நடந்திடுவார்!
என்ன உலகமடா!
ஏன்? இந்தக் கோலமடா!

அன்பு சொரிந்திடுவார்
ஆதரவு காட்டிடுவார்
பரிந்து பேசிடுவார்
பகட்டாக நடித்திடுவார்!
பகலிரவு பார்க்காமல்
பக்கத்தே இருந்திடுவார்!
என்ன உலகமடா!
ஏன்? இந்தக் கோலமடா!

கெஞ்சிப் பணிந்திடுவார்
கேட்டதெல்லாம் செய்வதென்பார்
சும்மாவும் இருக்கவிடார்
சுறுசுறுப்பாய் எமைவதைப்பார்
வேண்டியதை அடையும்வரை
வேண்டிக் குடைபிடிப்பார்
என்ன உலகமடா!
ஏன்? இந்தக் கோலமடா!

வேலைக்கு ஒருகாசும்
வேண்டாது செய்திடினும்
அள்ளிக் கொடுத்துவிட்டு
அலைகிறேன் என்றுசொல்லி
அயலண்டை ஆட்களிடம்
அவதூறு பண்ணிடுவார்
என்ன உலகமடா!
ஏன்? இந்தக் கோலமடா!

எடுத்த அவர்கருமம்
ஏதும்தடை ஆகிவிட்டால்
எள்ளளவும் எண்ணாது
எம்மீது பழிசொல்வார்
வாய்க்கு வந்தபடி
வாதாட வந்திடுவார்
என்ன உலகமடா!
ஏன்? இந்தக் கோலமடா!

உதவிகொள்ள வந்தவரை
உதாசீனம் செய்யாது
உலைந்துஉருக்குலைந்து
உன்னியதை செய்துவிட்டால்
உளமார ஒருவார்த்தை
ஒப்பாமல் மாறிடுவார்.
என்ன உலகமடா!
ஏன்? இந்தக் கோலமடா!

தானேதான் தன்கருமம்
தக்கபடி செய்ததென்பார்,
தனக்கு நிகராக
தரணியில் இல்லையென்பார்,
தாமாகப் புகழ்மாலை
தமக்கே சூட்டிடுவார்
என்ன உலகமடா!
ஏன்? இந்தக் கோலமடா!

நாம் ஏதும் கேட்டுவிட்டால்
நயமாக நழுவிவிடுவார்
சாட்டுடன் சமாதானம்
சாதகமாய்க் கூறிடுவார்
வேளைக்கு ஒருவேடம்
வேண்டுமெனப் போட்டிடுவார்
என்ன உலகமடா!
ஏன்? இந்தக் கோலமடா!

யாரை நம்புவது?
யாரை நாம்போற்றுவது?
எல்லாமே பம்மாத்து
எங்கேயும் குழறுபடி
என்ன உலகமடா!
ஏன்? இந்தக் கோலமடா!

நீதி நிலைக்குமோ இனி

போர்கள் அணைந்திடவும் பூசல்கள் மறைந்திடவும்
போட்டிகள் முற்றாக ஒழிந்திடவும் - பாரினில்
ஒன்றிணைந்து அன்பை வளர்த்திடவும், ஒருகாலம்
என்று வருமோ இனி?

பொய்கள் மறைத்திடவும் போலிகள் வீழ்ந்திடவும்
மெய்கள் சிறந்து விளங்கிடவும் - வையமதில்
நன்றி பெருகி நலம் காணும, ஒரு காலம்
என்று வருமோ இனி?

பிணிகள் அகன்றிடவும் பேதமை நீங்கிடவும்
மணியான சுத்தம் நிலைத்திடவும் - நாமெல்லாம்
ஒன்றாக இணைந்து சுகம் காணும், ஒரு காலம்
என்று வருமோ இனி?

வறுமை அகன்றிடவும் வாழ்வு வளம்பெறவும்
பொறுமை நெஞ்சமதில் உரம்பெறவும் - நேர்மையுடன்
ஒன்றி உழைத்து உயர்வாகும், ஒரு காலம்
என்று வருமோ இனி?

காதல்கள் கனிந்திடவும் கன்னியர் களித்திடவும்
காளைகள் கடமைதனைக் காத்திடவும் - இவ்வுலகில்
குன்றில் குலப்பெருமை குலாவிடவும், ஒருகாலம்
என்று வருமோ இனி?

கல்வி பெருகிடவும் கலைதனை வளர்த்திடவும்
கலாச்சாரம் கண்ணியமாய் பேணிடவும் - தத்தளிக்கும்
நெஞ்சமதில் சாந்தி கிடைத்திடவும் புத்தாண்டில்
நீதி நிலைக்குமோ இனி?

காணாமல் போனாயடி

உச்சிப் பொழுதினிலே - செல்லம்மா
உன்னை நினைக்கையிலே

உள்ளம் கனத்ததடி - எந்தன்
உடலும் உறைந்ததடி!

தேடித் திரிகையிலெ - செல்லம்மா
தேன்குரல் கேட்குதடி

ஓடிநான் வருகையிலே - எதிரில்
ஓர்நிழல் கண்டேனடி!

குங்குமச் சிமிழிடையே - செல்லம்மா
குறுநகை பூத்ததடி

கன்னக் கதப்பிடையே - இரு
கருவிழி புரண்டதடி!

குத்திட்ட மூக்கினிலே - செல்லம்மா
குத்திக் குடைந்ததடி

குண்டான குண்டலங்கள் - காதில்
குதித்து மகிழ்ந்ததடி

பளிச்சிடும் பல்வரிசை - செல்லம்மா
பவளங்கள் சொரிந்ததடி

அன்ன நடையினிலே உந்தன்
அபிநயம் கண்டேனடி

காலில் சலங்கையொலி - செல்லம்மா
காதில் ஒலித்ததடி

துள்ளித் திரிகையிலே-பரதம்
களிநடம் புரிந்ததடி

கட்டி அணைத்திடவே - செல்லம்மா
காற்றாய் சுழன்றேனடி

காத்து இருக்கையிலே-எங்கு
காணாமல் போனாயடி?

தாகம்

பங்குனியில் வெயிலடிக்க
பாதமெல்லாம் வெதவெதக்க - செங்கமலம்
பாதாம் பருப்பிட்ட
பால்ச்சோறு சுமந்துவந்தாள்

செவ்வாழைத் தோட்டத்தே
செம்மண் வரம்புகட்டி - காலை முதல்
செப்பமாய் நீர் பாய்ச்சும்
செல்லப்பன் களைத்திருந்தான்

ஆருயிர் அத்தானே
ஆருமில்லா வேளையிலே - உனக்கு
ஆசையுடன் ஊட்டிவிட
ஆகாரம் வந்ததென்றாள்

வேலியின் கரையோரம்
வேப்பமர நிழலிருக்கும் - முதலாளி
வேலப்பன் பார்த்திடுவான்
வேண்டாம் பால்ச்சோறென்றான்.

வயிற்றில் பசியில்லை
வாய்க்கு ருசியில்லை - எந்தன்
நோய்க்கு மருந்தில்லை
நோக்குவாய் மந்தநிலை.

காதோடு காதுவைத்தால்
காதல்மொழி மருந்தாகும் - அத்தான்
காலமெல்லாம் தந்திடவே
காத்துவந்தேன் வேண்டாமோ?

உச்சிவெயில் குத்துதடி!
உள்ளமெல்லாம் வேகுதடி!- கண்மணியே!
உன்மேனி பற்றிடவே
ஊயிர்நாடி துடிக்குதடி!

என்னுடலில் இவ்வுயிரும்
ஏன்தானோ தவிக்கிறது?-அத்தான்
எப்போது வந்திடுவாய்?
ஏக்கம் தணிப்பதற்கு?

மெல்லமெல்ல அடிவைத்து
மேட்டருகே வாகண்ணே!-உந்தன்
முதுகுவரை தொட்டணைத்து
முத்தமிட நான்வருவேன்.

உள்ளம் சிலிர்த்திட்ட
உணர்வுடன் நடைபயின்று-மெல்ல
அவனருகில் அவள்வரவே
அடிசறுக்கி குடைசாய்ந்தாள்!

ஆசையுடன் காய்ச்சிவந்த
ஆரமுதப் பால்ச்சோறு
ஆறாகப் பெருகிடவே
ஆதங்கம் கொண்டவளை

ஆணழகன் முன்தாவி
ஆர்வமுடன் கையேந்தி
ஆதரவாய் முத்தமிட்டு
ஆற்றினான் அவள்தாகம்!

ஏன் அழுதாய்?

கற்புடைய மாதே
கண்ணே கருமணியே
கண்ணீர் அதற்காகச்
சொரிந்தே அழலாமோ?

உன்னலத்தைத் தன்னலமாய்
உற்றவர்கள் பெற்றவர்கள்
ஊயர்வாக்கி வளமாக்க
உந்துவது தெரியாதோ?

எக்கருமம் செய்தாலும்
அக்கருமம் திறம்படவே
எக்குறையும் எட்டாது
அக்கறையாய் செய்வாயே!
அப்புறம் உனக்கென்ன
அஞ்சாதே நெஞ்சமதில்
வஞ்சமற்ற உற்றதுணை
வந்துவிடும் வாழ்ந்திடவே

காலங்கள் மாறிவிடும்
கஷ்டங்கள் தீர்ந்துவிடும்
கடுமையாய் நீயுழைத்தால்
கடன்கள் மாய்ந்துவிடும்

எல்லாமே எம்மனந்தான்
எம்மையும் ஆட்டுவது
எண்ணித் துணிந்துவிடின்
எட்டாது போய்விடுமா?

மென்மையே உன்பாதம்
மேனியோ பட்டாடை
உண்மையே உன்மொழிகள்
உன்னதமாய் உற்றவளே!

உன்மனதில் எந்நாளும்
உழலுகின்ற எண்ணங்கள்
என்மனதை எட்டாது
ஏங்குவது எதற்காக?

கண்ணுள் நிலவாகி
களிநடனம் புரிபவளே!
கட்டழகுப் பெட்டகமே
கருத்துடனே செப்பாயோ?

பெண்ணிற் பெருக்கெடுதத
பெயர்துலங்கி வளமாக்கி
உற்றகுறை உணரவைத்தல்
உன்மனதை உறுத்தியதோ!

சண்டையிட்டு வீண்வாதம்
சாக்குடனே கண்டனங்கள்
சரமாரிப் பேச்சுக்கள்
சலிப்பூட்டி விட்டனவா?

நெஞ்சத்தில் வஞ்சமில்லை
நேர்மைக்குப் பஞ்சமில்லை
அஞ்சாது கூறுவதை
ஆறுதலாய்க் கேட்காயோ?

மாறுமா?

சிறுவயதில் ஒருபோதும் செய்யாத பெரும் பிழையை
பெருவயது ஆனவுடன் செய்திடவே முன்வந்தேன்!

கூடாத கூட்டத்தில் கூடியநாள் முதலாய்
குணத்தைப் பறிகொடுத்து குழியிலேதான் வீழ்ந்தேன்!

காலையிலும் மாலையிலும் களவாகச் சேர்ந்தே
காசுபணம் எப்படியும் களவாடக் கற்றேனே!

கந்தனின் கொட்டிலுக்கு கடப்புவழி சென்றே
களவாக் கள்ளுண்ணக் கற்றுக் கொண்டேனே!

மூக்கைப் பிடித்தபடி முதன்முதலில் அடிகோலி
மூவரையும் முந்திடவே மூக்குமுட்ட முழுங்கிவிட்டேன்!

கண்கள் இருண்டுவர கருத்துகள் மாறிவிட
கணகணத்து உடல்உதற கடுகடுக்க நான்நடந்தேன்!

இப்படிச் சிலகாலம் இதமாகக் குடிபழகி
இன்றதனால் பெருந்துயரம் இரவுபகல் அடைகின்றேன்!

காலையில் தப்பினாலும் மாலையில் தப்பாது
கள்ளுக் கடைதேடி கருத்தென்னை இழுத்துவிடும்!

களவாகச் சென்றங்கே கால்ப்போத்தல் வாங்கிநின்று
கண்மூடி முழிப்பதற்குள் கடகடென்று இழுத்திடுவேன்!

கண்கள் சுழன்றுவர காதுகள் பஞ்சடைக்க
கண்டபடி வாய்ஊற காறியே உமிழ்ந்தெறிக்கும்!

தள்ளாடி நிலைதளம்ப, தடக்கி விழவைக்கும்
முழங்கையும் முழங்காலும் முறிந்ததுபோல் வலியெடுக்கும்!

மூக்குமுட்டக் குடித்ததனால் மூச்சுத் திணறடிக்கும்,
முன்பின் தெரியாமல் முழங்காலில் தவழவைக்கும்!

வழிநெடுகக் காண்போரை வலுவுக்கு அழைத்து
வாய்க்கு வந்தபடி வாதாட வழிசெய்யும்!

வீட்டில் உள்ளவரை வீழ்த்திப் பேசவைத்து
வீண்பழிக்கு ஆளாக்கி வீணடிக்கும் நிம்மமதியை!

மனைவியின் மனம்கரையும் மக்களின் நிலைகுலையும்
மட்பாண்டம் உருமாறும் மானங்கெட்ட குடியாலே!

சாப்பிட முடியாமல் 'சத்தி'வந்து சதிசெய்யும்
சயனித்தால் பகலிரவு சத்தியமாய்த் தெரியாதே!

அடுத்தநாள் எழுந்தவுடன் 'அலுப்பில்' உடல்முறியும்,
அப்படி இருந்தாலும் அடிகோலும் குடிப்பதற்கு!

காசுபணம் வீணாகி தேகசுகம் இரையாகி
மானம்மதி இழந்தேன்! மாளாத இக்குடியால்!

வள்ளுவன் அனுபவத்தால் வாய்மொழிந்த நன்மொழியை
வாழ்வினிலே கடைப்பிடிக்க வாய்ப்பையே தேடிநின்றேன்!

குடியைக் கெடுக்கின்ற குடியைக் குடைசாய்க்க
சத்தியமனங் கொண்டு சடுதியாய் முடிவெடுப்பேன்!

அத்தனையும் 'எத்தனை'நாள் அடிமனதை வருடிவிடும்
குடிகாரன் பேச்சாகி விடியுமுன் போய்ச்சேரும்!

மறுபடியும் வேதாளம் முருக்கமரம் தலைக்கேறும்
மாறாத இக்குணத்தை மாற்றுவது எப்படியோ?

பொன்னான நேரம்

கண்ணுக்குத் தெரியாது
காதுக்குக் கேட்காது
விண்ணுக்கும் மண்ணுக்கும்
வித்தைகள் செய்யும் நேரமது!

பணத்துக்கும் குணத்துக்கும்
பணியாத பாங்குடனே
பகலோடும் இரவோடும்
பக்குவமாய் வலம்வரும் !

பொன்னான நேரத்தைப்
போக்கடித்த பின்னாலே
பொய்யான சமாதனம்
சொல்வதில் பயனுண்டா?

பொழுதோடு புலர்ந்து
பொழுதோடு வலம் வந்து
பொழுதையே வசமாக்கி
பொழுதோடு நித்தமும்

பட்டென்று கருமங்கள்
பிந்தாமல் செய்துவிடின்
பொழுது போதவில்லையெனும்
பொய்ச்சாட்டு சொல்லாமல்
பொன்னான நேரத்தை
கண்ணார வென்றிடலாம்!

நவ 94

இனி என்ன தடையிருக்கு?

அகத்தில் அழகிருக்கு
அசைவற்ற உணர்விருக்கு
நிறைந்த மனமிருக்கு
நிலைதளம்பா குணமிருக்கு
பரந்த நோக்கிருக்கு
பலரையும் சேர்ப்பதற்கு
இணைந்து வாழ்வதற்கு
இனியென்ன தடையிருக்கு?

காலமெல்லாம் காத்திருக்க
காதலர்க்கு மனமிருக்கு
கண்ணியம் காப்பதற்கு
கள்ளமிலா உளமிருக்கு
உறவினரைச் சேர்ந்திருக்க
உள்ளத்தில் இடமிருக்கு
களங்கமில்லா காதலரை
கட்டிவைக்க மறுப்பெதற்கு?

கடவுளின் படைப்பினிலே
கறுப்பென்ன சிகப்பென்ன
கற்பூரம் போன்றவளை
காதலித்தேன் கைப்பிடிக்க
கண்ணின் மணிபோல
காத்திடும் குணமுண்டு
அனைவரையும் எப்போதும்
அணைத்திட மனமுண்டு

காலம் கடந்தபின்னே
கல்யாணச் சுகம்வேண்டாம்
அருமையாய் எனைவளர்த்த
அப்பாவைக் கேளம்மா!
காதலின் வலிமைதனை
கட்டாயமெ டுத்துரைப்பார்
காதலரைப் பிரிப்பதற்கு
காதகர்கள் நினைப்பதேன்?

உளமாரக் காதலித்து
உனையே கைப்பிடித்த
அப்பாவே செய்ததையே
அடியேனும் செய்கின்றேன்!
அதிலென்ன தப்பென்று
அம்மாநீ தடுக்கின்றாய்?
வடிவேலன் துணையிருக்கு
வரதட்சணை யெதற்கு?

பெற்றவர் மனம்கோண
பெண்டாட்டி சுகம்வேண்டாம்
காதலித்த நாமிருவர்
காலமெல்லாம் கண்சிந்தி
கட்டையினிலே போனாலும்
கடைசிவரை நாம்பிரியோம்
ஒற்றுமையாய் வந்தெம்மை
ஒப்பேற்றி வையம்மா!

போர்

விஞ்ஞானம் முன்னேறி விந்தைபல மெத்தியதால்
பாரிலுள்ள படைப்புக்கள் பங்கமற்று வாழவில்லை.

போட்டிகளும் பொறாமைகளும் போர்முனையில் சந்தித்து
வீட்டின் நிம்மதியை வீணாக்கிப் போனதையா!

கேடுகெட்ட ஆசைதனை கட்டிப்போட எவருமில்லை
கோபத்தால் கொண்டுள்ள மீளாத் துயரங்கள்

படைத்தவனை மிஞ்சிவிட்டு பலதுறையில் முன்னேறி
பக்குவம் அற்றதனால் படுகுழியில் வீழ்ந்தனரே!

ஊயிர்கள் அற்றவர்கள் ஊனம் உற்றவர்கள்
உலகில் இருந்தென்ன உருக்குலைந்து போயுமென்ன!

எங்கு? தான் காண்பேனடி!

அந்திப் பொழுதினிலே - செல்லம்மா
அருவிக்குப் போனேனடி!
கங்கைக் கரையினிலே - செல்லம்மா
கண்மணி நின்றாளடி!

மங்கிய வேளையிலே - செல்லம்மா
மங்கையை பார்த்தேனடி!
மெல்ல நடக்கையிலே - செல்லம்மா
மென்கரம் அசைந்ததடி!

மின்னல் இடைதனிலே - செல்லம்மா
பின்னல்கள் தொட்டதடி!
முத்துப் பரல்களிலே - செல்லம்மா
முழுமதி கண்டேனடி!

மாங்கனிக் கொங்கைகளில் - செல்லம்மா
மாதுளம் பூத்ததடி!
கயல்மீன் விழிதனிலே - செல்லம்மா
கண்ணைப் பதித்தேனடி!

காதலை வளார்த்திடவே - செல்லம்மா
காரணம் கொண்டாளடி!
கட்டி அணைத்திடவே - செல்லம்மா
கரங்களை வளைத்தேனடி!

கைக்குள் அடங்காமலே - செல்லம்மா
காற்றாய் மறைந்தாளடி!
ஏங்கித் தவிக்குதடி - செல்லம்மா
ஏமாந்து எரியுதடி!

எங்குதான் காண்பேனடி - செல்லம்மா
என்னருமைக் காதலியை?

காணத்துடிக்குதடி கண்ணே!

கண்கள் அலையுதடி - கண்ணே!
காணத் துடிக்குதடி!

மண்டை இடிக்குதடி - மனம்
மண்டிக் குமையுதடி!

கன்னங்கள் வீங்குதடி - கனத்தில்
காதோரம் நோகுதடி!

இமைகள் துடிக்குதடி - இரண்டும்
இடையில் செருகுதடி!

காதுகள் அடைக்குதடி - சத்தம்
கேட்க மறுக்குதடி!

மூக்கு முட்டுதடி - இடையில்
மூச்சுத் திணறுதடி!

கைகள் சோருதடி - இரண்டு
கைமூட்டும் உளையுதடி!

நெஞ்சு பதறுதடி - தேகம்
நெருப்பாய் எரியுதடி!

நாக்கு வறளுதடி - பேச்சில்
நாதம் அலறுதடி!

இதயம் இடிக்குதடி - இடித்து
இரண்டாய் பிளக்குதடி!

உணவை வெறுக்குதடி - வாயும்
உண்ண மறுக்குதடி!

உள்ளம் உருகுதடி - உடலின்
உதாரம் தளருதடி!

காலம் கரையுதடி - தேடிக்
கால்கள் தளருதடி!

உடம்பு களைத்தபடி - எதிலும்
ஊக்கம் குலைந்ததடி!

எங்குநீ சென்றாயடி - சொல்லாது
என்னைநீ ஏய்த்தாயடி!

கட்டி அணைக்கவடி - கண்ணே!
கைகள் அழைக்குதடி!

உத்தமர் என்பவர் யார்?

உலகினில் உழல்கின்ற உயிர்களே பொய்யடா
உன்னித்துப் பார்த்தால் உலகமே பொய்யடா!

உருவாக்கி அறிவூட்டும் அப்பனும் பொய்யடா
உதிரத்தால் உடல்தேற்றும் அம்மையும் பொய்யடா
உற்றதன் அண்ணனும் தம்பியும் பொய்யடா
உத்தமியுன் அக்காளும் தங்கையும் பொய்யடா!

உலகினில் உழல்கின்ற உயிர்களே பொய்யடா
உன்னித்துப் பார்த்தால் உலகமே பொய்யடா!

உதவிக்கு முன்வரா மாமனும் பொய்யடா
உண்மைகள் பேசிடா மாமியும் பொய்யடா
உறவாட மனமில்லா மச்சானும் பொய்யடா
உள்ளதை மறைத்திடும் மச்சாளும் பொய்யடா!

உலகினில் உழல்கின்ற உயிர்களே பொய்யடா
உன்னித்துப் பார்த்தால் உலகமே பொய்யடா!

உயிருக்கு உயிரெனும் நண்பனும் பொய்யடா
உதவிக்கு முன்வரும் நண்பியும் பொய்யடா
உள்ளத்தை உருக்கிடும் காதலி பொய்யடா
உறவாட முத்தமிடும் காதலன் பொய்யடா!

உலகினில் உழல்கின்ற உயிர்களே பொய்யடா
உன்னித்துப் பார்த்தால் உலகமே பொய்யடா!

உயிரென்று மணம்கொண்ட கணவனும் பொய்யடா
உருகியே உடல் தரும் மனைவியும் பொய்யடா
உதிரத்தில் உருவான பிள்ளைகள் பொய்யடா
உலகினில் ஆண்களும் பெண்களும் பொய்யடா!

உலகினில் உழல்கின்ற உயிர்களே பொய்யடா
உன்னித்துப் பார்த்தால் உலகமே பொய்யடா!

உறவாடும் உயிருக்கு உத்தமர் பொய்யடா
உரமுள்ள நெஞ்சுக்கு உண்மையும் பொய்யடா
உண்மையைச் சொல்லிடின் உலகமே பொய்யடா
உத்தமர் என்பவர் யாரென்று சொல்லடா!!

வாணியம்மா

நாளாந்தம் உன்புகழைப் பாடிடுவோர்
நாவினிலே நர்த்தனம் புரிந்திடுவாய்.
நல்லபடி நற்கலைகள் நாடுவோர்க்கு - மிக்க
நல்லருளை நயமுடனே நல்கிடுவாய்.

உண்மையுடன் உளமாரக் கும்பிடுவார் - உயிர்
உள்ளவரை உயர்வுறவே அருள்சுரப்பாய்.
வெள்ளைமனம் கொண்டோரை வதனியம்மா - சில
வேதனைகள் தந்து வித்திடுவாய்.

கள்ளமில்லாக் காதலர்கள் கரம்பிடிக்க - உள்ள
காலமெல்லாம் கண்விழித்தே காத்திடுவாய்.
கொள்ளை அழகுடைய வாணியம்மா - நம்
கொள்கை நிதமறிந்தே கொடிபிடிப்பாய்.

நவரசம் பொருந்திய நாயகியே - நம்மை
நல்வழி சார்ந்திடச் செய்திடம்மா!
சாந்தம் மிகுந்த சரஸ்வதியே - என்றும்
சாந்தியை எங்களுக்குத் தந்திடம்மா!

என்னதுயர் வரினும் எம்வாழ்வில் - நிதம்
எண்ணித் துயர்கடியும் எம்தாயே!
பண்ணில் தமிழ்ப்பாடல் நாமிசைத்தே - தினம்
மண்ணில் உன்புகழைப் பாடிடுவோம்.

வெம்பி அழுகின்றாள்

அப்பாவின் ஆசைக்கே
அம்மாவே இணங்கிவிட்டு
அவள்கொண்ட ஆனந்தம்
அவளுடலைக் குளிரவைத்து
அடிவயிற்றில் கருவாகி
அதனையே உருவாக்க
அவள்பட்ட வேதனைகள்
அப்பப்பா ஆரறிவார்?

வாயூறும் ஒருக்களிக்கும்
வாந்திவரும் தலைசுற்றும்
சாப்பாட்டில் மனமின்றி
சாய்ந்தே படுக்கவைக்கும்
கையுளையும் காலுளையும்
கைக்குளச்சி சோர்வடையும்
நித்திரைதான் வந்திடாமல்
நிதமும் அலைக்கழிக்கும்!

முகமதைக்கும் மூச்சுமுட்டும்
முழுவுடலும் பருத்துவரும்

இருக்கவோ எழும்பவோ
இயலாது உடல்கனக்கும்
இட்டுமுட்டு தாங்காமல்
இடுப்போ வலியெடுக்கும்
ஈற்றுக்காலங்களில் இடைக்கிடை
இடுப்பில் உதைகிடைக்கும்!

இத்தனை இன்னல்களும்
இரவுபகல் அனுபவித்து
முன்னூறு நாட்களாய்
முத்திப் பழுக்கும்வரை
வளரும் பயிருக்கு
வளமான உணவூட்டி
எப்போது அவதரிக்கும்
என்றே துடித்திருப்பாள்!

அப்பனைப்போல் அச்சான
அழகுள்ள மகன்தனை
அள்ளியே அணைப்பதிலே
அடைந்தாள் மனக்குளிரச்சி!
இரவென்ன பகலென்ன
இமைகொட்டி கவனமெல்லாம்
இளங்கதிரை வளர்ப்பதிலே
இதமாகச் செலவிட்டாள்!

கோபங்கள் தாபங்கள்
கோள்கள் குண்டணிகள்
குறைகள் சேராமல்
குறிப்புடன் காத்திட்டாள்
உணவில் சுத்தம்போல்
உடையிலும் காத்துவந்தாள்
படிக்கத் துணைநின்று
பட்டமும் பெறவைத்தாள்!

வேலையில் தேர்வுபெற

வேண்டினாள் ஆண்டவனை,
வேலையும் கிடைத்துவிட
வேளைக்கே மகனுக்கு
கால்கட்டு போட்டுவிட
காத்திருந்த வேளையிலே
அம்மாவை அழவைக்கும்
அதிர்ச்சியுடன் மகன்வந்தான்!

பாசம் ஒருபக்கம்
பாசாங்கு மறுபக்கம்
சாதகம் இல்லாமல்
சாருமொரு பெண்ணோடு
வாசலுக்கு வந்தவனை
வாழ்த்த வகையின்றி
வெம்பி அழுகின்றாள்
வெந்தணல் புழுவதுபோல்!!

ஆகும்வழி காண்பாய் நீ!

ஈழத் திருநாடே என்னருமைத் தாயகமே
என்போன்ற பாவிகளை ஏன்பெற்றாய் உன்மடியில்?

இரவுபகல் உறுதிமொழி ஊட்டியெம்மை வளர்த்தவளே
இன்றுவரை எம்மவரை ஏமாற்றி வருவதுமேன்?
கல்வியில் தரம்பெற்று முன்னணிக்கு வந்தவரை
கலாசாலை சேராமல் கடைசிவரை தடுத்ததுமேன்?
சைவமும் புத்தமும் சமமாக வளர்ப்பவளே
செந்தமிழும் சிங்களமும் பிரித்தாள வந்ததுமேன்?

ஈழத் திருநாடே என்னருமைத் தாயகமே
என்போன்ற பாவிகளை ஏன்பெற்றாய் உன்மடியில்?

கள்ளம் கபடமற்ற கன்னியரை காளையரை
காரணம் இல்லாமல் சுட்டுப் பொசுக்கியதேன்?
வானத்தில் வட்டமிட்டு வகையான குண்டெறிந்து
மானமுள்ள உயிர்களைநீ மாய்த்து வருவதேன்?
ஒன்றும் அறியாத சின்னஞ் சிறுசுகளை
ஒடுக்கிப் பிடித்து ஒளித்து வைப்பதேன்?

ஈழத் திருநாடே என்னருமைத் தாயகமே
என்போன்ற பாவிகளை ஏன்பெற்றாய் உன்மடியில்?

கண்டபடி குண்டுபட்டு காலிழந்து கையிழந்து
காயமுற்ற மக்களுக்கு மருந்துதர மறுப்பதேன்?
பெற்றவரும் உற்றவரும் பெண்டாட்டி பிள்ளைகளும்
பித்துப் பிடித்தலைக்கும் பிசாசாய்நீ வந்ததேன்?
உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி
உறங்க இடமின்றி அகதிகளாய் ஆக்கியதேன்?

ஈழத் திருநாடே என்னருமைத் தாயகமே
என்போன்ற பாவிகளை ஏன்பெற்றாய் உன்மடியில்?

இருதரப்பு மலர்களும் இரவுபகல் சண்டையிட்டு
இன்றுவரை கண்டதென்ன வெற்றியல்ல வெறும்தோல்வி
மகத்தான இன்னல்களை அனுபவித்து வாழ்கின்ற
மக்கள்தான் மாவீரர் மற்றவர் மகாகோழை - ஆதலினால்
போனதெல்லாம் போகட்டும் போர் உடனே நிற்கட்டும்
போகாத உயிரென்றும் உறுதியுடன் வாழட்டும்!

பிரித்தாளும் தந்திரங்கள் புறமுதுகு காட்டியதால்
பிடிவாதம் விட்டுவிட்டு பிரியமுடன் முன்வந்து
அன்பை வலியுறுத்தி அமைதியை நிலைநாட்டி
அவரவர் உரிமைக்கு ஆகும்வழி காண்பாய்நீ!

என்ன சுகம் கண்டோம்?

தேயிலையும் ரப்பரும் தென்னைத் திரவியமும்
தேங்கிவளரும் எம்நாட்டுச் சொத்தாக!
முத்தும் பவளமும் முதல்ரக ரத்தினமும் - என்றும்
முறையான பணம்தரும் எப்போதும்.

குன்றில் குளிர்படியும் குறைவின்றி புல்வளரும்
குறிஞ்சியில் பட்டியினம் பால்சுரக்கும்
'மகாவலி'யும் களனியும் மலையருவி தாவிவரும் - ஆங்கே
காலமெலாம் தானியங்கள் விளைவுதரும்.

கொம்புத் தேன்வகையும் கொழுத்த வனவிலங்கும்
குறைவின்றி எம்காட்டில் குலாவும்
நீலத் திரைகடலின் நித்திய செல்வங்கள் - ஆழ்கடலில்
நித்தமும் வலைவீசக் கிடைக்கும்.

மேல்நாட்டு மரக்கறியும் மேலான கனிவகையும்
மேலோங்கி எம்மண்ணில் வளரும்
சுவையான உணவுண்டு சுத்தத்தை நாம்பேணி
சுகமாக எந்நாளும் வாழ்ந்திடலாம்.

வறண்ட பிரதேசம் வளர்ச்சி அடைவதற்கு
வகையான கிணற்றுநீர் கிடைக்கும்
விவசாயப் பெருமக்கள் தினமும் பாடுபட்டு
விளைச்சலில் வெற்றியைக் காண்பார்.

வெய்யோன் கதிர்வீச வெண்ணிலா குடைபிடிக்க
வெப்பம் வெகுவாகத் தணியும்
தென்னங் கீற்றிடையே தெம்மாங்கு பாடிவரும்
தென்றலில் எம்மேனி சிலிர்க்கும்.

கல்விக்குப் பஞ்சமில்லை களியாட்டம் கொஞ்சமில்லை!
கவலைக்கு எம்மனதில் இடமில்லை
கோவில்கள் கொண்டாட்டம் உல்லாசப் பிரயாணம்
காலமெலாம் எம்மனதைக் கிள்ளும்.

உச்சி மலையுண்டு! உலர்ந்த நிலமுண்டு!
மெச்சி வாழ்வதற்கு சூழும் கடலுண்டு!
இத்தனை வளம்கொண்ட எம்நாட்டை விட்டுவிட்டு
இங்குவந்து என்னசுகம் கண்டோம்?

விடிந்தது சித்திரையே!

விடிபனி கரைய இடிமழை கலைய
விடிந்தது சித்திரையே!

குளிர்திரை குடைந்த இலையுதிர் மரங்கள்
துளிர்தளை ஓங்கியதே!
கவினுறு மலரொடு கனிமொழி கூறிக்
களித்தது வண்டினமே!
புள்ளினம் கூடிப் புதுப்புது கானம்
புகழுடன் இசைத்தனையே!
விடிபனி கரைய இடிமழை கலைய
விடிந்தது சித்திரையே!

மலையனிட அருவி மாண்புடன் தாவி
நிலைபெற ஓடியதே!
கலையுறு மானும் கான மயிலும்
கவலை கலைந்தனவே!
புல்வெளி மாடும் கம்பளி ஆடும்
புனிதமாய் மேய்ந்தனவே!
விடிபனி கரைய இடிமழை கலைய
விடிந்தது சித்திரையே!

காளையும் கன்னியும் கனிமொழி பேசிட
காதல் கனிந்ததுவே!
சில்லிடும் குளிரினில் சீமையில் வாழ்பவர்
சிந்தை மகிழ்ந்திடவே!
போர்வைகள் நீங்கிட புதுஉடை போர்த்திட
போயினர் கதிர்பெறவே!
விடிபனி கரைய இடிமழை கலைய
விடிந்தது சித்திரையே!

அற்புத மகளே கேளம்மா!

அழகிய மலரே நீயம்மா
அமுத மொழியே தேனம்மா
அற்புத மகளே கேளம்மா - நீ
அறிவில் எந்தன் உயிரம்மா!

விழிதனில் இரண்டு மீனம்மா
விழித்தால் மிரளும் மானம்மா
சாயல் தோற்றம் மயிலம்மா - நீ
சாய்வாய் சோலைக் குயிலம்மா!

முல்லை மலர்தான் சிரிப்பம்மா
முழுமதி முகத்தை திருப்பம்மா
சொல்லில் தேனைச் சிந்தம்மா - நீ
சுவைத்திட என்னைப்பாரம்மா!

கண்ணே மணியே கற்பகமே
கட்டிப் பொன்னே கலையுருவே
எண்ணம் தீர்க்கும் என்மகளே - நீ
எண்ண இனிக்கும் கற்கண்டே!

குன்றின் குடமே மணியம்மா
குத்து விளக்கே சிரியம்மா
குழந்தை முகத்தை சரியம்மா - நீ
குளிர்ந்த முத்தம் சொரியம்மா!

சாந்தம் நிறைந்த முகமம்மா
சாயி திருபாதம் சேரம்மா
சகல நலனும் கேளம்மா - நீ
சற்குண வதியாய் வாழம்மா!

02.04.90

மறைக்காமல் சொல்லிவிடு

என் அருகில் ஏன் வந்தாய்
என் முன்னே ஏன் நின்றாய்
என் கண்ணை ஏன் பாரத்தாய்
என் கண்ணுள் ஏன் புகுந்தாய்
என் மனதை ஏன் தொட்டாய்
என் கண்ணை ஏன் மறைத்தாய்
என் உணர்வை ஏன் தளர்த்தாய்
என் ஆவல் ஏன் வளர்த்தாய்
என எண்ணம் ஏன் கலைத்தாய்
என் விருப்பம் ஏன் தந்தாய்
என்னை எண்ணி ஏன் மகிழ்ந்தாய்
என்னை இன்று ஏன் மறந்தாய்?

என்னை நாடி ஏன் வந்தாய்
என் உணர்வில் ஏன் கலந்தாய்
என் ஆசை ஏன் வளர்தாய்
என் குணத்தை ஏன் கெடுத்தாய்
என்னை இன்று ஏன் வெறுத்தாய்
என்னை விட்டு ஏன் சென்றாய்
என்மனத்தை ஏன் உடைத்தாய்
என் உணர்வை ஏன் குலைத்தாய்
என்அவலம் ஏன் உணராய்
என் அழுகை ஏன் அறியாய்
என் குறைகள் ஏன் மறைத்தாய்
எதையும்சொல்ல ஏன் மறுத்தாய்?

மறைக்காமல் சொல்லிவிடின்
மறுகணமே நான்மகிழ்வேன்.

15.05.90

பூம்பனி புவியிடை தாவியதே!

மூடு பனித்திரை மேகத்திலே
மூலக் கதிர்மழை வானத்திலே
காற்றில் குளிர்நிறை வேளையிலே
காந்தம் கவ்விய கோலத்திலே
பூவிதழ் பொங்கிப் பரவையிலே
பூம்பனி மழைபுவி தாவியதே!

வானுயர் மரக்கிளை உச்சியிலே
வாடிடும் பட்சிகள் கொடுகையிலே
கூரையில் விழுந்து படிகையிலே
கூட்டினில் குட்டிகள் குலுங்கையிலே
வீட்டினுள் குளிர்ந்து வீசையிலே
விரட்டிட மக்களும் முனைந்தனரே!

பாதையில் வாகனம் தூங்கையிலே
பார்த்திடப் பகலவன்பின் நிற்கையிலே
பாதையில் பனித்திரை பொங்கையிலே
பாலகர் துள்ளிக் குதிக்கையிலே
போனவர் வந்தவர் நாவினிலே
போக்கற்ற சொற்கதிர் ஊறியதே!

பாரினில் படித்திட்ட பாங்கினிலே
பாடியே தென்றல் கூவையிலே
பளிங்குபோல் நுரையும் இறுகையிலே
வழுக்கியே மக்கள் வீழ்கையிலே
வானத்தில் தேவதை சிரிக்கையிலே
வாழ்த்திட வந்தனள் வெண்மதியே

தை - 92

நாம் காணும் இன்பங்கள்

மனம்குளிர் மழைபொழிய
மழைத்துமியை குளிரணைக்க
பூப்பூவாய் இதழ்பிரிந்து
பூமிக்குத் தாவிவர
பாலாடை வெள்ளத்தில்
பால்நுரை தளம்பிநிற்க

பட்டியிலும் தொட்டியிலும்
பால்பொங்கி வரைகட்ட
மரங்களும் செடிகொடியும்
மரத்துப் பனிசுமக்க
பாதைகளும் ஓடைகளும்
பனிமூடி மறைத்துநிற்க

வீடுகளும் வாகனமும்
வேதனையில் வாடிநிற்க
ஆடவரும் பெண்டிரும்
அருங்குளிரை அகற்றுதற்கு
கனமான உடைதரித்து
கம்பளியால் சூடாக்கி

மெல்லமெல்ல அடிவைத்து
மெதுவாக நடைபோட்டு
நாளாந்த வேலைகளை
தாமாகச் செய்வார்கள்
கோழிகளும் குஞ்சுகளும்
குடல்நடுங்கி கூச்சலிடும்

ஆடுகளும் மாடுகளும்
அடிக்கடி இரைமீட்கும்
பறவைக் கூட்டங்கள்
பறப்தை நிறுத்திவிடும்
பள்ளிச் சிறார்களுக்கு
பனிக்கட்டி கொண்டாட்டம்

என்னதான் சொன்னாலும்
எம்நாட்டு வெப்பத்தில்
இரவுபகல் வீசுகின்ற
இதமான தென்றலில்
நாம்காணும் இன்பங்கள்
நாடெங்கும் கிடைத்திடுமா!

03.01.92

சுகம் எங்கே!

மாடுகட்டி ஏருபூட்டி - கால்கடுக்க
மலைக்காட்டு வயல்உழுது
மாரிமழை சேருமுன்னே - மண்ணில்
மணியான நெல்விதைத்து
கண்ணும் கருத்துமாய் - காவல்செய்து
களைபிடுங்கி பயிர்வளர்த்து

முத்திப் பழுத்துக் - குடைசாய்ந்த
முத்தான நெற்கதிரை
சுத்தமாய் வெட்டித் - தலைசுமந்து
சூடுவைத்து சூடடித்து
புடைத்துத் தறித்து - குல்லத்தால்
பக்குவமாய் பதர்நீக்கி

பனைஓலைக் கூடைக்குள் - நிரப்பி
பரணில் போட்டுவைத்து
பஞ்சப் பிணியின்றி - தினமும்
பசியாறும் பயனுள்ள
சுதந்திர வாழ்வதுபோல் - உலகில்
சுகம்எங்கே இருக்குமடி!

03.01.92

பனிமழை பொழிந்ததம்மா!

கார்முகிலாள் மடிசுமந்து
காலமெலாம் காத்துவைத்த
கன்னிக் கருங்குயிலின்
களங்கமில்லா உள்ளமதில்
கனத்தோடு இடிஇடிக்க
கடகடத்து உடல்பதற
கண்ணீர் சொரிந்திட்ட
காரிகையின் நீர்தெறிக்க
மூடுபனி முன்னேறி
முகிலிடையே அதையணைக்க
பூவிதழாய் உருமாறி
பூமியெங்கும் அவைபடிய
பால்செறிந்த கோலமதில்
பக்குவமாய் அவைததும்ப
பட்டிகளும் தொட்டிகளும்
பனிமழை பொழிந்ததம்மா!

தை - 92

பொங்கலோ பொங்கல்

தைபிறக்க தரமாகவழிபிறக்க - மாந்தர்
தரணியதில் தளைத்தோங்க
உயிர்வாழ வகையானஉணவுதரும் - உத்தமர்
உழவரது திருநாளில்
பொங்கலோ பொங்கலென்று - பொங்கிடும்
பொங்கலுக்கு பாரினில்நிகரேது.

புத்தம் புதியமண்ணில் - பிசைந்து
புதிதாகப் பானை செய்து
புடமிட்ட பொன்போல - நல்ல
பதமாக வேகவைத்த
புதுப்பானை தேர்ந்தெடுப்பார் - தரமான
புதிர்பொங்கல் பொங்கிவிடவே!

ஆதவன் எழுமுன்னே - யாவரும்
அவசரமாய் துயிலெழுந்து
மனைவி மக்களுடன் - தையில்
மருத்துநீர் ஆடியபின்
பொழுது விடியுமுன்னே - ஆண்மகன்
பொங்கிட அடிகோல்
முன்புற வாசலிலே - முற்றத்தில்
முழுநிலா வட்டத்தில்
சாணத்தில் நீர்கலந்து - கரைத்து
சாந்தாக நிலம்மெழுகி

முற்றம் பொலிவுறவே - மனையாள்
முத்தாரக் கோலமிட
வாசமுள்ள மலர்தொடுத்து - வளைத்து
வாசல்வரை தொங்கவிட்டு
மாவிலை தோறணங்கள் - கரும்பு
வாழையுடன் பூண்டிருக்க
முக்காலி அடுப்படுக்கி - தலையில்
மஞ்சள்நீர் குளிப்பாட்டி

பிடியளவு சாணத்தில் - சிறிதாய்
பிள்ளையார் உருவாக்கி
பூரண கும்பம்வைத்து - அருகில்
பூவோடு பழம்படைத்து
குத்து விளக்கேற்றி - யாவரும்
கும்பிட்டு வழிபட்டு
பானைக்குள் பால்நிரப்பி - தலைவன்
பக்குவமாய் அடுப்பேற்றி
வீபூதிக் குறியிட்டு - பானைக்கு
வித்தாரப் பொட்டிட்டு

இஞ்சியிலை மஞ்சளிலை - சேர்த்து
இறுக்கமாய் கட்டிவிட்டு
அக்கினி அனல்மூட்டி - சுற்றிவர
அவசரமாய் நெருப்பெரிக்க
பட்டாசு வெடிவெடிக்க - சிறிய
பாலகர்கள் குதூகலிக்க

பகலவன் முகம்பார்த்து - சரிந்து
பால்பொங்கல் பொங்கியதும்

புதிர்பச்சை அரிசியிட்டு - அகப்பையால்
பதனமாய் அடிதுளாவி
பயறும் கயூப்பருப்பும் - சுத்தமான
பிளம்சும் சக்கரையும்
தேங்காய் பாலுடனே - கரைத்துவிட
தேனாகத் தித்திக்க

ஆக்கி மடைபரப்பி - அனைவரும்
ஆதவனைக் கும்பிட்டு
பகிர்ந்து கொடுத்து - பண்புடனே
பந்திவைத்து உட்கார்ந்து
அருந்தும் பொங்கலுக்கு - அகிலத்தில்
அமிர்தமும் ஈடாகுமோ!

03.01.92

மணிவிளக்கு!

மாதர்கள் மத்தியிலே மணிவிளக்கு - அம்மா
மானிலத்தில் எங்களது குலவிளக்கு
மாமலையின் உச்சியிலே ஒளிவிளக்கு - அம்மா
மாடத்து ஆட்சியிலே மதிவிளக்கு

பாரினிலே பரந்தோங்கும் மணிவிளக்கு - அம்மா
பாட்டினில் கருத்தாகும் சுடர்விளக்கு
நாவினிலே நடம்புரியும் நல்விளக்கு - அம்மா
நாளெல்லாம் ஒளிவீசும் கதிர்விளக்கு

மூவேந்தர் ஆட்சியிலே மணிவிளக்கு - அம்மா
மூதாதை அறிவூட்டும் முதல்விளக்கு
தேவர்கள் கண்ணுக்கு அகல்விளக்கு - அம்மா
தேடிவந்த எங்களுக்கு திசைவிளக்கு

தரணியில் தலைசிறந்த மணிவிளக்கு - அம்மா
தழிழர்கள் வழிகாணும் தனிவிளக்கு
வாயார நான்பாடும் கலைவிளக்கு - அம்மா
வளமுள்ள வித்திட்ட தழிழ்விளக்கு!

16.03.93

நாம் என்ன செய்தோம்?

கல்வியில் முன்னேறக் காசுபணம் இல்லாமல்
கண்ணீர் வடிக்கின்ற கன்னியரும் காளைகளும்
நாளைக்கு இவ்வுலகில் நல்லபடி வாழ்வதற்கு
நாமென்ன செய்தோம் நமக்கே தெரிகிறதா?

கண்ணால் கண்டும் காணாத பாவனையில்
காலத்தை வீணாக்கி கள்வர்போல் நடித்து
மேடையில் பேசியும் வாதாடி வழக்குரைத்தும்
மேதாவி தோறனையில் மேம்பாடு செய்தோமா?

நாளாந்தம் உலையும் நம்முயிர் சோதரரை
நாட்டுக்கு நல்லதனை நாளெல்லாம் செய்வதற்கு
நாலுபணம் கொடுத்து நல்லவழி காட்டி
நாமும் எம்பங்கை நல்லபடி செய்தோமா?

எம்மைத் தாங்குகின்ற எலும்புக் கூடதுபோல்
எப்போதும் எம்முடன் ஒட்டி இருந்தவரை
தப்பான பாதையில் தடம்புரள வைக்காமல்
தயவாகக் கணைதொடுத்து தலைநிமிரச் செய்தோமா?

உலகில் உருவெடுத்து போராடும் எம்மவர்கள்
உணவின்றி உடையின்றி வறுமையில் வாடுகையில்
எம்மைப் போன்றவரை உயர்த்த முனைந்தோமா?
எட்டிப் பார்த்தோமா? ஏனென்று கேட்டோமா?

05.05.93

உள்ளம் மாறுமா?

உயிர் இருக்கும்வரை
உடல் இருக்கும்
உடல் இருக்கும்வரை
உள்ளம் இருக்கும்
உள்ளம் இருக்கும்வரை
உணர்வு இருக்கும்
உணர்வு இருக்கும்வரை
உதவி கேட்கும்
உதவி பெற்றவுடன்
உள்ளம் மாறும்

பதவி இருக்கும்வரை
பந்தம் பிடிக்கும்
பந்தம் இருக்கும்வரை
பணம் இருக்கும்
பணம் இருக்கும்வரை
பகட்டு இருக்கும்
பகட்டு இருக்கும்வரை
துணிவு இருக்கும்
துணிவு குறைந்தவுடன்
பதவி நீங்கும்

கண் இருக்கும்வரை
காதல் இருக்கும்
காதல் இருக்கும்வரை
காமம் இருக்கும்

காமம் இருக்கும்வரை
கட்டி அணைக்கும்
கட்டி அணைக்கும்வரை
கதைகள் அளக்கும்
கதைகள் கனிந்தவுடன்
கையைக் கழுவும்

பசி இருக்கும்வரை
புசிக்க இருக்கும்
புசிக்க இருக்கும்வரை
ருசிக்க இருக்கும்
ருசிக்க முடிந்தவுடன்
கையை மறக்கும்
கையை கேட்காமல்
கருமம் ஆற்றும்
காமம் முடிந்தவுடன்
கணத்தில் மறக்கும்.

06.05.93

வழியெது தாயே!

காணியும் பூமியும் வேண்டாம்
காரிகை துணையும் வேண்டாம்
கட்டிலும் மெத்தையும் வேண்டாம்
கட்டித் தங்கமும் வேண்டாம்
கண்ணைத் திறந்திட வைக்கும்
கல்வியை தாருங்கள் தாயே!

பட்டமும் பதவியும் வேண்டாம்
பட்டாடை தரித்திட வேண்டாம்
சீதன பாதனம் வேண்டாம்
சீர்கெட்ட வாழ்வும் வேண்டாம்
பட்டினி போக்கிட வைக்கும்
பாதையை காட்டிடு தாயே!

சாதிகள் பேசிட வேண்டாம்
சண்டாளர் சண்டைகள் வேண்டாம்
சலனமும் சோகமும் வேண்டாம்
சரிவர வாதிட வேண்டாம்
சாமாதானவாழ்வினை தேடும்
சன்மார்க்க வழியெது தாயே!

06.05.93

ஆணவம்

ஆத்திரக் காரனை அடக்கிடலாம் - எளிதில்
ஆணவக் காரனோ அடங்கிவிடான்.

வசனத்தில் மெல்லினம் இருக்காது - என்றும்
வல்லினம் வலியவே வட்டமிடும்.

அவசரப் படுவதில் சுரனையா - அந்த
ஆணவக் காரர்கள் அப்படித்தான்.

ஆரம்பம் வெற்றியாய் ஆகிவிட்டால் - அவர்
ஆணவம் துள்ளிக் கூத்தாடும்.

ஆரையும் ஆணவம் அடிக்கின்றது - பின்பு
அடக்கி முடக்கித் தடுக்கின்றதது.

எண்ணத்தில் நிலையாக எண்ணுபவன் - உலகில்
என்றுமே ஆணவத்தின் அடிமையில்லை.

அடக்கத்தில் தோன்றிடும் நல்லசுகம் - என்றும்
ஆணவத்தில் எவரும் கண்டதில்லை.

அடக்கம் அவமானப் பட்டதில்லை - இதனை
அறிந்துமா ஆணவம் அடங்கவில்லை.

ஆயுளில் நீடித்து வாழ்வதற்கு - எமது
ஆணவம் நிச்சயம் அடங்கவேண்டும்.

10.01.95

இவள் யார்?

அவளிடத்தில் இருப்பதெல்லாம்
ஆராயும் விண்மீன்கள்
உதட்டைப் பிளந்துவிட்டால்
உட்பரப்பில் முத்துக்கள்
மென்மையான குரலில்
மெதுவாகக் கதைதொடுப்பாள்
பார்த்திருக்கும் வேளைதனில்
பாவையெனைப் பார்க்கமாட்டாள்
பூவெடுத்து நான்கொடுத்தால்
பூம்பாவை முகம்பதிப்பாள்
பூமியில் தாவுகையில்
பூம்பாதம் தாளமிடும்
இடையொடியும் இடுப்பின்கீழ்
சடைநாகம் தொங்கும்
வாழைத் தண்டினைப்போல்
வாளிப்பாய் காலிருக்கும்
மூங்கில் கழுத்தின்மேல்
முகம்நின்று சதிராடும்
முக்கிய பாகங்கள்
முந்தானை முத்தமிடும்
இவள்என்ன பெண்தானா
இறைவா சொல்லப்பா!

12.02.95

அயல்நாட்டு மாப்பிள்ளை

வேளைக்கு ஒருவேடம்
வேண்டுமென்று போடுகின்றார்
வெள்ளையர் பார்த்து
வெட்கப் படுகின்றார்
பொய்யிலே தினம்புரண்டு
மெய்யை மறைக்கின்றார்
குடியில் பதம்கண்டு
குடியைக் கெடுக்கின்றார்
கைகூசாமல் எங்கெங்கும்
களவெடுக்கப் பழகிவிட்டார்
கன்னியரை மருட்டி
களவுறவு கொள்கின்றார்
வெளிநாட்டில் தங்களது
வெட்கத்தை விற்றுவிட்டார்
இவர்களின் கோலத்தை
இவர்கள் விடமாட்டார்
ஆதலினால் வேண்டாம்
அயல்நாட்டு மாப்பிள்ளை!

20.04.95

மறப்பேனா!

களிப்பில் நிதமாடும் கானமயிலோ!
காதருகில் பண்பாடும் கன்னிக்குயிலோ!
கலையுருவில் வடிவமைத்த பொற்சித்திரமோ!
கவினுறும் வேல்விழி மெய்மானோ!
ஒலிக்கென்றும் உயிரூட்டும் தேன்மொழியோ!
புளிப்பற்று தித்திக்கும் பலாப்பழமோ!
உள்ளத்தை ஊடுருவும் கற்பகமோ!
உண்மையில் யாரடிநீ சொல்லாயோ!

காலமெலாம் காத்துவைத்த கன்னிமடை
காட்டாறாய் கட்டவிழ்ந்து பாய்கிறதே!
காய்கின்ற நெய்யாகக் கொதிக்கிறதே!
காதலிலே கண்ணுக்குத் தெரிகிறதா?
கண்ணுள்ளே கண்குத்தி எனைமருட்டி
கட்டழகன் மார்புடனே இணையவைத்து
மலர்ந்தும் மலராத செவ்விதழில்
மதுரத்தேன் தந்ததையும் மறப்பேனா?

29.04.95

காத்திருங்கள் பதம்பார்ப்போம்

மானையே வென்றவிழி
மருந்தளவும் மிரளவில்லை
நேரான கூர்மூக்கில்
நேர்மை நிறைந்திருக்கும்
கூன்பிறை நெற்றிதனில்
குண்டுமணிப் பொட்டிருக்கும்
உதட்டின் புன்சிரிப்பில்
உதிரிப்பூ இதழ்விரிக்கும்
தேனினும் இனியகுரல்
தித்திப்பாய் கதையளக்கும்
பசளிக் கொடிபோல்
பளபளக்கும் பொன்மேனி
அடிமேல் அடிவைத்தால்
அன்னம் பின்தொடரும்
அலைபாயும் மயில்தோகை
அசைந்தாடும் குதிவரைக்கும்
பார்த்தால் பசிதீரும்
பதினெட்டின் பருவமலர்

பட்டப் படிப்புகளில்
பரிசில்கள் பலதும்பெற்றாள்
தாய்தந்தை அனுமதியை
தயவுடன் பெற்றபின்பு
சகாதேவன் வீடுசென்று
சங்கீதம் பயின்றுவந்தாள்
நாலிரண்டு மாதங்கள்
நாள்தோறும் பயிற்சிபெற்று
இசையின் நுணுக்கத்தை
இதமாகக் கற்றுக்கொண்டாள்

ஆசிரியர் மனமுவந்து
ஆசிகள் சொரிந்தபின்பு
ஆறுதலாய் ஒருவேளை
ஆராய்ந்தார் அவள்மனதை
பதட்டமின்றி புன்னகைத்தாள்
பணிவாகப் பதில்சொன்னாள்
காதலிக்கப் பயின்றபின்பு
கட்டாயம் காதலிப்பேன்
காத்திருக்க முடியும்வரை
காத்திருங்கள் பதம்பார்ப்போம்!

30.04.95

உண்மையிலே உவகை தான்!

கவிதை பாடும் நெஞ்சங்களே!

தமிழால் நாம் இணைந்தோம்! – அவள்
தமிழாள் தாள் பணிவோம்!

யாரிவள் புதுமுகம் எனவிரண்டு புருவங்கள்
சேரவே சிந்திக்கும் உங்களுக்காய் அறிமுகமே!
காரிகை ஈழத்தவள்! சீவிப்பது இங்கிலாந்து – கவித்
தூரிகை துணையுடனே மனத்தூசு துடைப்பேனே!

பெரிதாய் தமிழ்கற்ற பேதையல்ல ஆனபோதும்
எளிதாய் தமிழெடுத்து இயம்புகிறேன் யானும்
பரிவாய்ப் பார்த்தவர்கள் படைப்பதனை கவிதையென
ஒருவாய் கூறிவிட்டால் உண்மையிலே உவகைதான்!

உங்கள் உள்ளம் கூறுவதை வெளிப்படையாய்
தங்கள் மனந்திறந்து தந்திடுவீர் தபாலினிலே!
திங்கள் இவள்தன்னறிவைத் தீட்டிடுவாள், திருந்திடுவாள்!
பங்களிப்பாள்! பலமணித்துளிகள்! பாவுக்காய் பரிசளிப்பாளே !

காலங்கள் நாளுந்தான் காட்டுகிறது ஏராளம்!
ஓலங்கள் இடுவதிலே ஒருபோதும் இலாபமில்லை!
பாலங்கள் போட்டாச்சு! பகிர்ந்திடலாம் அனுபவங்கள்!
ஞாலமே ஒன்றாச்சு! கோர்ப்போமே நேசக்கரம்!

பொங்கலுக்காக அனைத்துலக வானொலியில் வாசித்த கவிதை.

தைமகள் வந்தாள்

தும்பிக்கையான் பதம்
துதித்தே யானும்
நம்பிக்கையுடன் நயம்பும்
நற்பாவைக் கேளீர் நம்பிக்கையை வளர்ப்போம்
நாட்டினைப் பெறுவோம்!
நம்பிக்கைதானே சாதனையின்
நன்மூலிகையன்றோ!

தைமகள் வந்தாள்
தைரியம் தருவாள்
வறுமைகள் ஒழிப்பாள்
வளம்பல பூப்பாள்
கொடுமைகள் எரிப்பாள்
குலம்பல வளர்ப்பாள்
இனிமைகள் தருவாள்
எங்களை ஆள்வாள்!

சந்திரனில் மனிதன்
அடிபதிக்க ஆகுமென்றால்
சந்ததியின் சொத்துகளை

சொந்தமாக்க ஆகாதா?
சிந்தியுங்கள் சிறப்பாய்
செயற்படுங்கள் முழுதாய்
வந்தியுங்கள் வழமையாய
வாய்த்திடட்டும் பொன்னாள்!

நடந்தவை பேசி
நாட்களைப் போக்க
கடந்தோமா ஆற்றை - இன்னும்
கடும்புயலில் நாமே
படந்தனை வடிவாய்
பதிப்போம் உளமதில்
உடந்தையாய் நாமும்
உதவுவோம் வளமாய் !

எண்ணாமல் எதுவும்
ஆகாது மனிதா!
என்னாளும் எண்ணு
எம்முன்னே மலரும்
எம்நாடு நமக்கே
எப்போது கிடைக்கும் - என
எல்லோரும் தினமும்
எண்ணுவோம் கிடைக்கும்!

அழுகின்ற மழலைக்கு
அழுகையே ஒத்தடமாகுமா?
எழுகின்ற கவலைக்கு
ஒளடதமே நம்பிக்கையே!
வழிகின்ற பொங்கல்நுரையை
வாழ்த்தாக நினைப்போம்
வருகின்ற தைமகள்
வனப்பாக வலம்வருவாளே!

ஊரிலுள்ள போது மாவீரர் தினத்துக்காக எழுதிய கவிதை. இங்கு நான் வந்தபின் ஞாபகத்தின் பக்கங்களைப் புரட்டி எடுத்த கவிதை. ஊரிலுள்ள போது கோட்டையைக் கைப்பற்றினர் புலிகள். அப்போது பிறந்த கவிதை.

காத்திடுவீர் மண்ணை

மூத்தோரே முதல்வோரே ஒன்று
சேர்ந்திருக்கும் அவையோரே
பூத்த இத் திங்களிலே - உயிர்
நீத்த எம் மறவர்களை -பாவில்
கோர்த்தே நானும் கூறிடவே
காத்திடுவீர் மண்ணை - என
யாத்து வந் தேன் தமிழதனை
சேர்த்திடுவீர் சிந்தை தன்னில்

ஆண்டு நின்ற நம் நாட்டைப்
பூண்டு போன்றே புல்லர் களைய - பாம்பு
தீண்டி விட்ட சிறுத் தையாக
மீண்டு நாட்டை நமதா க்கிவிட
வேண்டு மென்ற வேங்கை களும்
பூண்டு நின்ற யுத்த மதில்
மாண்டும் மனதில் வாழ்ந்தே
நீண்டு நிற்பர் அவனி யிலே!

கற்றனர! தாம் பெற்ற கல்வியை
விட்டனர்! உற்றனர் உளத்துள் வேள்வி!
இழந்தனர் உறவினர்!

துப்பாக்கியைத் தொட்டனர்
பெற்றனர் பெரும்பயிற்சி!
தட்டினர்! பல தலைகளை!
கொட்டினர்! கோட்டையை முட்டினர்
ஏற்றினர் புலிக்கொடி - புகழ்வானை
எட்டினர்! புகழ்வானை எட்டினர்!

தாகத்தை தாயகத்திற்கீந்து - தம்
தாகத்தை தரணிக்கே தெரிவித்து
யாகத்தை வளர்த்த எம் திலீபன்!

வேகத்தை வேங்கைகளுக்கு வளர்க்க
தேகத்தை தேசத்திற் கீந்து - தன்
பாகத்தைப் பயனாக்கிய மில்லர்!

ஏகத்தை எல்லாம் துறந்து
தியாகத்தில் ஒளிர்ந்த சோதியா! - என்று
ராகத்தில் மீட்க எம்மால்
ஆகக் கூடிய விடயமா? என்ன!

சீலன், செல்லக்கிளி, சந்தோசம், சிவா,
அன்பழகன், ஆனந்தி, அன்பு, அருந்ததி
விக்ரர், லவன், ராதா, வினோத்
சுது சுஜி உதயன்
என்று எம் அண்ணல்கள் பெயரை
நன்று நாமும் செப்பி விட
ஒன்று இரண்டல் லவே - இவர்கள்
என்றும் நின்றிடுவர் எம் நினைவில்!

இங்கிலாந்து வந்த நான் அம்மாவைப் பிரிந்து வாடினேன். அப்போது கொழும்பில் இருந்த அம்மாவுக்காக நான் எழுதி தொலைபேசியில் ஒப்புவித்த பிறந்தநாள் கவிதை.

அன்புக்கு அம்மா

அம்மாவை நினைத்தாலே
அன்பு சுரக்கும்!
ஆனந்தம் தன்னாலே
வந்து பிறக்கும்!

தன்னைத் துறந்து
எம்மைச் சுமப்பவள்!
கண்ணை இமையாய்
கருத்துடன் காப்பவள்!

விண்ணை அளப்பவள்!
வீரிய அன்பினள!
அன்னை அவளுக்கு
அழகுப் பிறந்த நாள்!

அன்புச் சுரங்கமே
ஆனந்த மன்றமே!
இன்ப வள்ளலே
இனிய தெய்வமே!

அம்மாக் குழந்தையே!
அருஞ் சொத்தே!
இணையுங்களேன்,
எங்களுடனே!

கட்டியணைத்தே
கட்டியம் கூறிடும்
கடைக்குட்டியும்
கடவுளையே நம்பியே!

அத்தனை ஆசையும்
முத்தென ஆகிட
அமைந்தது..
ஆயிரத்தாண்டு! - அம்மா
ஆதலால் நீங்கள்
ஆனந்தப் படுங்கள்!
ஆண்டவன் தருவான்
அவனை நம்புங்கள்!

உன்னுரிமை உனதானால்
உனக்கேது ஒரு துயரம்

தமிழனாய்ப் பிறந்தானால்
தம்முனிமை தனையிழந்து
வெம்பிகின்ற நம்மிளைஞர்
நம்முடன் யோகட்டும்
நசுக்குதல் என்றெண்ணி
தம்மிளைய சந்ததிக்காய்
தாரைவார்த் தனர் தம்முயிரை!

பத்துமாதம் சுமந்தவளை
ஒத்துவுடன் பிறப்புகளை
கத்தவைத்து கதறவைத்து
சித்தமதில் உறுதிகொண்டு
உற்றதம் மினத்துயர் கேட்டு
யுத்தகளம் புகுவதென்றால்
சத்தியமாய் லேசல்ல!
அத்தனை பெருமுள்ளம்!
முத்தனைய வேங்கைகளுக்கு!

தன் மானத் தமிழன்
தரணிக்கே உதாரணமாய்

முன்னாக நிற்கின்றான்
முனைப்பாகச் சமர் புரிகின்றான்-அதனால்
தமிழனென்று சொல்ல
தலை நிமிர்ந்து வாழ
தமிழ்த் தரணியிலே
தவழ்ந்து வளர்ந்தேன்-என்பதிலே
தணிகை எனக்கோ
தணியாத பெருமையுண்டு!

எங்கணுமே இருக்கின்ற
எம்மினத்து வாசிகளே!
எங்களாலான உதவிகளை
சிங்கள அரசுச் கெதிராக
எப்பொழுதும் வழங்கிவிட
எடுப்போம் தீர்மானம்!
அனுப்புவோம் நோட்டுக்களை-அவர்கள்
தொடுக்கட்டும் தொடர்கணை!
அழியட்டும் அரசுப்படை
எடுக்கட்டும் ஓட்டம்!
எம்முரிமை எமக்காக ஆகட்டும் ஆகிவிட்டால்
எமக்கேது ஒரு துயரம்!

முடியவேண்டும் இச்சமர்-கீழ்ப்
படியவேண்டும் ஸ்ரீலங்கா அரசு
விடியவேண்டும் நற்பொழுது!
மடியவேண்டும் எம்மனத்துயரம்!
அகலவேண்டும் எம்மகத்திருள்!
புகழவேண்டும் பூமி புலிகளை!
திகழவேண்டும் இவர்கள் பகலவனாய்
மகிழவேண்டும் என்றும் எம்மினமே!

சக்கர நாற்காலியில் தள்ளப்பட்ட என் நிலையுடன்
மேலுமுள்ளவென் தாளாமை தந்த பயன் இங்கிலாந்து வந்து
உதவி பெறும் நிமித்தம் ஓரிடத்தில் வசிக்க வேண்டியவளானேன்.
அந்த வேதனையின் விம்மல். பலவருடங்களின் பின்பு லண்டன்
தமிழ் வானொலியிலும் ஸீ ஐ தொலைக்காட்சியிலும் பாடிய
கவிதை.

காலத்தின் கைதிகள்!

தேனூறும் தமிழில் தித்திப்பாய்
பானூறு படைத்திட பாவையெனக்கோ
பலகோடி ஆசை!

நானூறும் நரகம் நல்காது பொழுது
வீணாக நானும் வடிப்பேனே அழுது
கோணாது தினமும் எடுப்பேனே திடமனது!

ஏன் இந்த வாழ்வு? எதற்காக விடிவு?
எவரக்குமே இது தெரியாது! - இதுவே
இறைவனின் முன்னேற்பாடு!

காலத்தின் சிறையில் நாமோ கை
விலங்கில்லாக் கைதி – மீட்பவர் யாரோ?
காலமே தானோ!!

கறுப்பு ஜூலை தந்த கவிதை சன்ரைஸில் ஒலிபரப்பானது.

கறுப்பு ஜூலை!

போகட்டும் கறுப்பு ஜூலை புதிதாய்
ஆகட்டும்! அம்சமான ஆகஸ்ட்!

கறுப்பு ஜூலை கழியட்டுமே!-நம்
வெறுப்பு நினைவுகள் தேயட்டுமே!
ஒறுப்பு துன்பங்கள் தொலையட்டுமே!-இன
அறுப்பு சோகங்கள் தீரட்டுமே!

இனக்கலவரத்தால் தமிழன் இறைச்சியாய்
விளம்பரமாகிய வேதனைகொள் 'எண்பத்தி மூன்று'
துலாம்பரமாய் துவண்டு தமிழினம்

'லங்கா'வெங்கும் அடித்து நொருங்கிய ஜுலை!

வேகத்தை வேங்கைகளுக்கு வளர்த்த,
தேகத்தை தேசத்தீற்கீந்திட-தன்னுடற்
பாகத்தை பயனாக்கிய மில்லரை-சரித்திர
மேகத்தில் சூரியனாய் ஆக்கிய ஜுலை!

நம்மவர நவாலியில் நாசமாய் நசுங்கி
பொம்மரால் பொசுங்கிட ,புவியினின்றகன்றிட
சிங்கள,ராணுவம் செய்த சதியினால்
வெம்பிய வெறுப்பு ஜுலை -கறுப்பு ஜுலை!

கொக்கட்டிச் சோலையில் கொல்லப்பட்ட ஜுலை!
கிழக்கில்! தங்கவே லாயுத புரத்தில்
தங்கத தமிழினம் தறிக்கப்பட்டு
அங்கங்கள் சிதைய அழிந்த ஜுலை!

சிங்களக் கூட்டம் இப்போ மனதுள்
பயங்கொள் ஜுலை , பயங்கர ஜுலை!
போகட்டும் கறுப்பு-ஜுலை புதிதாய்
ஆகட்டும்! அம்சமான ஆகஸ்ட்!

இணையத்து நண்பனொருவன் நிச்சயமான தன்வருங்காலத் துணைக்காக எழுதித் தரப்பணித்ததாலே வடித்தது.

சித்ரா! சித்ரா! சித்ரா!

சிங்காரப் பெண்ணே சித்ரா!
சிந்தையிலி னிப்பவளே சித்ரா!
குங்குமச் சிலையே சித்ரா!
குருத்தாய்ச் சிரிப்பவளே சித்ரா!

தேன்மதுர மொழியாளே சித்ரா!
தெவிட்டாத தேனே சித்ரா!
மானிகர விழியாளே சித்ரா!
மருட்டும் மங்கையே சித்ரா!

என்னிதய தேவியே சித்ரா!
ஏங்குகிறே னுனக்காய் சித்ரா!
பொன்னினிய குணத்தாய் சித்ரா!
போற்றுகிறே னின்னையே சித்ரா!

கண்ணின் மணியே சித்ரா!
கணவனா வேனே சித்ரா!
உன்னினை வாலே சித்ரா!
உருகுபவன் நானே சித்ரா!

சன்ரைஸ் வானொலி தலைப்பு தந்த சிந்தனை. காதலைப் புரிந்தவ் யார்?

இதுவும் காதல் தான்!

காதலால் தான் மேதினி இயங்கும்!
ஆதலால் காதல் வாழட்டும்
காதல் தினமும் வாழட்டும்
காதல் தின வாழ்த்துக்களே!

ஓடுகின்ற பேருந்தில்
நாடுகின்ற கண்களால்
பாடுகின்ற பல்லவிகளும்
காதல் தான்!

நெரிசலின் இடையினில்
கரிசனமாய் கண்களும்
தரிசனம் கொள்வதால் - தாளாது துடிப்பதும்
காதல் தான்!

முன்வீட்டினில் மாலினியை
பின்வீட்டினில் பிருந்தாவை
எந்நேரமும் கண்ணடிப்பதும்
காதல் தான்!

குறுக்கிடும் அழைப்பினில்
திடுக்கிடும் தேன்குரலால்

பளிச்சிடும் பகற்கனவுகளும்
காதல் தான்!

எத்தனை ஆண்டுகள்
பத்தெனக் கழிந்தாலும் - காத்திருந்து
சித்திரத்தாள் கரம்பிடித்தலும்
காதல் தான்!

குணமென்ன குணம் பணந்தான் குறியென
தினம் தினம் மாறிடும்
அணங்குகள், ஆடவரை அலையவே வைப்பதும்
காதல் தான்!

கரம் பிடிப்பேன் கண்மணியே
கணமும் ஓதுபவன்
கடல் கடந்ததுவும் கட்சிகள் மாறுவதும்
காதல் தான்!

கணனியில் கருத்துகள்
பிணைந்ததே! பிரிவதேன்? - இணையத்தில்
இணைந்திடும் இதயங்கள்
இனிமையில் திளைப்பதும்
காதல் தான்!

எந்தனது உள்ளமோ
இதமாய் இயம்புவதோ
கவிதை சமன் காதல்!
காதல் சமன் கவிதை!
இதுவும் காதல் தான்!

ஆனையிறவு முகாம் கைப்பற்றலென்பது பாரிய சாதனை தமிழீழ வரலாற்றிலே. அப்போது இருவாரங்கள் சன்ரைஸில் கவிதைகள் ஒலிபரப்பானது. முதல்வாரம் தொடுத்த கவிதை சொல்ல தொலைபேசி வாய்ப்புக் கிட்டாமல் மறுவாரம் மேலும் வரிகள் சேர்த்து வாசித்தேன்.

அடுத்தது என்ன?

தொடுத்தது! என்ன! நம்புலிப்படை - போர்
தொடுத்தது! என்ன!
தொடுப்பது! என்ன! நம்புலிப்படை- போர்
தொடுப்பது! என்ன!
எடுத்தது! என்ன! சிங்களப் படை - ஓட்டம்
எடுத்தது! என்ன!
எடுப்பது! என்ன! சிங்களப் படை - ஓட்டம்
எடுப்பது! என்ன!
அடுத்தது! என்ன? 'ஆமாம்' நம் தேவையின்
அடுத்தது! என்ன?

'ஆமாம்' அடுத்தது! என்ன?

துஞ்சித் துயின்றனரா? - இல்லை
அஞ்சித் தவித்தனரா - தாம்
பிஞ்சுகள் என,பின் நின்றனரா?
'பஞ்சி' என்றுபின் போட்டனரா?
வெஞ்சமரால்...எதிரியை
அஞ்சியன்றோ ஓடவைத்தனரே!

பணியாதது நம் பணியென
துணிவாகத் தொடுத்தனர்- போர்
அணியாக வந்த அரக்கர்படை
பணிவாகப் பயந்தோடியது!
'மணி' யாக எங்கள் சிறுத்தை
அணியாக கொண்டது அழியாப்புகழ்!
அணியாகக் கொள்ளுது - அழியாப்புகழ்!

ஆனையிறவு யெனும்
அரக்கர்மன்றம் - நம்
சேனையினால், அடியோடு
அகற்றப்பட்டதே!
ஏனைய சாக்கூடங்களும்
ஏயக்கப்படும் நாள்
நாளைய ஏட்டில்
நன்றாய்ப் பதிய வேண்டும் - என
யாத்து வைத்தேன் அன்று!

பலாலியென்ன..இப்பக்கக்
கிளாலியென்ன - எங்கள் படை
முழக்கமே இருக்கவேண்டும்!
எமக்கதே யெண்ணமாக வேண்டும்!!
பழக்கமாய் நாமும் - பணப்
புழக்கத்தால் வளம்பட, மனதாய்
சுணக்கமின்றி செயற்பட வேண்டும் -
கோத்து வைத்தேன் அன்று!

ஆகவில்லை ஏழு நாட்கள்
ஆகவில்லை ஏழு நாட்கள்
ஆனாலோ இன்று
தேனான செய்தி - எம்மை
நானா விதமாகவும்
நம் செவி, அடுப்பது என்ன!

கிளாலியில் காத்திருக்க
கிளைவிட்டுப் பாய்ந்த புலி நாவற்
குழியிலன்றோ குறிவைத்தனர்!
அரியநல் யுத்தத்தால் ..
அரியாலையும் 'அடிபணிந்தது'

'மணி' யாக இம்மாணிக்கங்கள்
மணியந் தோட்டமும் ஏகினராமே!
மணியந் தோட்டமும் ஏகினராமே!

எம்மவர் இன்னுயிர் ஈந்து,
இளம் இரத்தம் சிந்தி
இன்பத் தமிழீழம் பெற
சும்மாவே சென்றுட்கார
அம்மா எமைப் பெறவில்லை! தமிழா!
எம்மாலான பங்கை- இன்முகத்துடன்
மும்மரமாய் பகின்றிட எழுந்திடு தமிழா!

தொடுத்திடும் துணிகரப் போரால்-ஒட்டுமொத்தமாய்
எடுக்குது அரக்கர் படை ஓட்டம்!
அடுத்தது நாமும் விரும்பும்
அழகான தமிழீழம் மலருது!
அடுத்தவர் ஆதிக்கம்
அகன்று நாமும், எம்மண்ணில் துஞ்சிப்
படுத்திடும் நாளும் தெரியுது.

அப்போது இயற்கையின் சீற்றம் இப்போது போலிருக்கவில்லை. அந்தத் தவிப்பில் சன்றைஸ் வானொலி பங்கு கொள்ள எங்களை அழைத்தது.

வெடித்தாளே பூமித்தாய்

பொறுமைக்கு இலக்கண மானவள்!
பொருளேது மில்லாமல் கொடுமை செய்தனளே!
இதயம் வெறுமை யானதே வெம்புகிறோம்!
வேதனை உணர்ந்து துடிக்கிறோம்!!

காரணமே இல்லாமல் தண்டிக்கப் பட்டனரே!
வேதனமே இல்லாமல் வெடித்தாளே பூமித்தாய்!
வேதனைப் படுகிறோம்! வேதனையில் பங்கு கொள்கிறோம்!
சாதனம் வழியே, சகோதரக்கரம் கொடுக்கிறோம்!!

பள்ளிச்சென்ற குழந்தை வீட்டுக்கு வருமா?என
கொள்ளிகொள் உதரம்நம் நாட்டுத்தாய் க்குவழமை!
எள்ளளவும் எண்ணாத குஜராத் தாய்மாரே! துயரில் பங்கு!!
கொள்ளளவுந் தெரியாத குடிசனஅழிவு ஐயகோ!!

ஆண்டாண்டு தோறும் அழுவது போக அவர்க்கு..
வேண்டியது என்ன? சிந்திப்பது மானிடா நின்கடன்!!
தோண்டிடு பெருநிதி! தொடுத்திடு உதவிக்கரம்!
காண்கிடு நிம்மதி! காட்டிடு மனித நீதி!!

எரிவது! பக்கத்து வீட்டுக் கூரை!
பரிவது! தமிழா நின் பணி!
புரிவது! தொண்டு! புறப்படு துணிவாய்!!
சரிவதல்ல! செய்த புண்ணியம்! சரித்திர மாகட்டுமே!!!

சன்ரைஸில் போட்டிக்கு எனத் தந்தனர் தலைப்பு. அனைத்து எட்டுவரிக் கவிதைப் போட்டியாளரும் தேர்ந்தெடுக்கப்பட்டது தான் விந்தை.

உயிரோடு உறவாக

பயிரோடு நீராக,த யிரோடு பாலாக
உயிரோடு உறவாக உழலுமுன் னதப்பிறவி!

தன்னைத் தாரைவார்த்து எம்மைத்தா ரகையாக்குபவள்!
பொன்னைப் புடம்பார்க்கும் பொன்மனச் செம்மலவள்!

கண்ணைஇ மையாய்க்கருதி காத்திடும் தெய்வமவள்!
முன்னைப் பிறவியில்நாம் செயதமுழுப் புண்ணியமவள்!

அன்னை!அ வளுக்கேஇ லக்கணமே யவளானவள்!
என்னைக்கும் அவள்நாளே! ஏதெரருதி ருநாளே!
இணையத்து நண்பர்களுக்காக பொங்கல் வாழ்த்து.

பொங்கல் நல்வாழ்த்து

அன்புசேர் தோழர்காள்!

அழகாக வாழ்த்த ஆயிரம் ஆசையுண்டு
அனபுப்பாத் தொடுக்க பாவைக்கோ நேரமெங்கு?

சூரிய பகவானே! சுடர்விடும் ஐயனே!-நீ
பாரிய செயல்புரிந்து பாரையே காக்குமுன்
உயரிய உன் புகழை கூறிட கோடியுண்டு!
நேரிய நேர நெருக்கடியில் ஓரிரு வார்த்தையிலே...

தைமகள் வருகிறாள்! தைமகள் வருகிறாள்!
இனிமைகள் சேர்க்க, தனிமைகள் போக்க,
வலிமைகள் கோர்க்க, வறுமைகள் போக்க,
உரிமைகள் கொடுக்க, தைமகள் வருகிறாள்!!!

நம்பிக்கை நம் கையாக நம்பியே உயர்வு பெறுவோம்!!
கும்பிட்டே யானும் செப்பினேன் வாழ்த்தை..
பொங்கட்டும் மகிழ்வு பூக்கட்டும் புதுவாழ்வு!!!
சேர்க்கட்டும் இனிமைகள்...செழுமையாய்..
என ஆக்கமாய் வாழ்த்துகிறேன்.. அன்புடன் ஏற்பீர்!
வாழி! நண்பர்காள் வாழி!!!

இணையத்து நண்பர்களுக்காக சித்திரைப் புதுவருடத்தில்...

சித்திரைப் பெண்ணாள்!

சித்திரை பெண்ணே...
சித்திரை பெண்ணே...
சிறு நடை போட்டு வா!

பத்தரை மாற்றுத் தங்கம் - என
இத்தரை மாந்தர் மகிழ்ந்திட
முத்திரை பதித்திட வா!

வாழ்ந்திடும் வாழ்வு இனித்திட...
சேர்ந்திடட்டும் வசந்தம் எங்களுடன்!
தீர்ந்திடட்டும் துன்பம் முழுமையுடன்!
ஆழ்ந்திடட்டும் மாந்தர் மகிழ்வினிலே!!

கணணியில் கட்டுண்டு கிறங்கும் தோழர்களே!
மன நிம்மதியில் நீவீர் வாழ்ந்திடுங்களேன்
என, நிலா யானும் உள்ளம் இனிக்கவே
கனதியாய் கூறிடும் இப்புத்தாண்டு வாழ்த்துக்களே!!

அவசரத்திலும் கவிதை பாடுவதைக் கடமையாகக் கருதியதால் பிறக்கும் கவிதை.

தீபாவளி வாழ்த்து

விறைக்கும் குளிர் விரைவான வாழ்க்கை-எனினும்
இறைக்கும் கிணறாய் ஊறும் இனிய நினைவுகள்!
நிறைக்குமே! நெஞ்சம் நெகிழ்வில் திளைக்குமே!
முளைக்கும் புத்துணர்ச்சி! முளைக்குள்ளொரு வேகமுமே!

பத்தோடு பதினொன்றாய் பட்டாசு கொளுத்தி
சத்தமே போடாது எரிகாயம் மறைத்த தீபாவளி!
புத்தாடை உடுத்தி புளகாங்கிதமடை தீபாவளி!
மத்தாப்புக் கொளுத்தி மனதெல்லாம்பூரிக்கும் தீபாவளி!

இதயங்களே! தீபங்கள் உயார்ந்தே ஓங்குமே!
இணையுங்க ளுங்கள் கொள்கை யையிவ்வழி!
விதையுங்கள் முயற்சி! விளையட்டும் வெற்றியே !
வகையாக யானும் வணங்கியே வாழ்த்துகிறேன்!

நான் வானொலியை முடுக்கும் போது தேர்தல் தேவை தானா? என்ற பாணியில் விவாதம் போயக் கொண்டிருந்தது. அதற்காக ஆக்கிய அவசர ஆக்கம்.

அதுவரை

எதேச்சையாய் முடுக்கினேன் வானொலி!
என்ன பேச்சையா? என்ன பேச்சையா?
எம்மூச்சையா வாங்கிடத் தேர்தல்?
எம்மூச்சையா வாங்கிடத் தேர்தல்?

போச் சையா போச் சையா
எதிர் காலமே போச்சையா
என்று கதறிடவா? தேர்தல்
என்று கதறிடவா? தேர்தல்

தமிழா!! உன் உதிரமென்ன?
தண்ணீராச்சா?
தமிழா!! உன் உதிரமென்ன?
தண்ணீராச்சா?
இனியுமென்ன பேச்சையா?
இனியுமென்ன பேச்சையா?
தேர்தலென்ன? -பெரும்
கொச்சை ஐயா -பெரும்
கொச்சை ஐயா!

ஆண்ட தமிழினம்
பூண்ட வேள்விகள்
மாண்டே போயிட
வேணடுமா தேர்தல்?
வேணடுமா தேர்தல்?

கிடைக்கும் தமிழீழம்
இருக்கும் ஒரு தேர்தல்
தொடுக்கும் ஒரு தேர்தல்
இனிக்கும் அப்போது தேர்தல்!
அதுவரை..
எமக்கில்லைத் தேர்தல்!!!

தந்தை செல்வா! தமிழின் புதல்வ!

தந்தை செல்வா! தமிழின் புதல்வ!
நிந்தை பெறுது ஐய! எம்மினமே..
முந்தை வினைப் பயனா?இல்லை
மூத்தவ ர்கள்செய் தவறே தானா?

மலேசிய மண்ணிலு தித்தமாபெருந் தலைவா!
மாசிலர் வுன்மனது மாணிக்க மன்றோ?
நேசமுங்கள் மொழி! பாசமுங்கள் பணியன்றோ!
தேசபிதா! தமிழீழத் தேசபிதா! துதிக்கிறோம்!

வார்த்தை ஜாலம்கா ட்டாதவல்ல வழக்கறிஞர்!
பார்த்தாலும் மனதில் பதியாத சிறுவுருவம்!
நேர்த்தியான சுபாவம், நீண்டபெ ருநோக்கு!
பூர்த்தியாக வில்லை,ஐய வுன்பெரு விருப்பு!

முப்பத்தி யொன்று,மூன்று ஒன்றில் பிறந்தாய்!
முழுமன தாய்கூட் டணியில்தி கமழ்ந்தாய்!
விருப்பத்தில் கொள்ள வில்லை பதவி!
ஜி.ஜி.பியினின்று விலகினாய்! தமிழரசுக் கட்சியமைத்தாய்!

மலையகத் தமிழர்து ன்பம்நி னதென்றாய்!
நிலையான தீர்வேதமி ழீழமென நின்றாய்!
குலையாத வுறுதிகொள் குன்றின்வி ளக்குநீ!
விலையான நின்னுயிர் பறிகொடுத் தநாளினறன்றோ!

நல்லைக் கந்தனுக்கு அருகாமையில் எம் அரியாலையூரும் அமைந்ததாலே அவனழகைப் பருகிய இனிய அனுபவங்கள் என்றும் என் மனதில்.

நல்லைக் கந்தன் திருநாள்

பிள்ளையா ரின்தம்பியவன் பெரியம னதுடையோன்!
நல்லைக் கந்தனுக்கு நல்ல திருநாளாம்!
தொல்லை தீர்ப்பானாம் துயர்கள் களைவானாம்!
இல்லை எங்களுக்கு இதய கிலேசமுமே!

திலகம்வழித் தோன்றல், தில்லைக் கூத்தன்மகன்
அழகனவ னுக்குஅ ணிகள் பலவுண்டு
உலகம் பூராவும் அன்பர் பலருண்டு
கலகம் தீர்ப்பானே! கண்ணீர் துடைப்பானே!

அழகனவன் வாசல் அன்புப் பணிகளுமே
பிசகலாகா தே,நேரம் பிசக லாகாதே!
பிழைகள் விடுகின்றோம் பேசிக்கழிக் கின்றோம்.
பழகவேண்டும் நாம், பழகவேண்டும் நாம்!!

முந்துவி னைப்பிறவி வந்துபி றந்தாச்சு
எந்தை யிவனுள்ளான் எம்மைக் காத்திடவே
சிந்தை முழுதிலுமே கொண்டு விடவேண்டும்
கந்தன வன்நாமம் களையுமெ ங்கள்துயர்!

கொடியே றவுமேகொ ள்ளுதுமன எழுச்சி!
மிடிதீரவே வடிவேலனவன் வலம்வருமழகை
இடிசேரவு மேஇமைசே ராதுஎங் களினம்பருக
கடிதெனவே கைகூடக் கந்தனருள் வேண்டும்!

இணையததிலே உலகம் பூராவும் உள்ள தமிழ்பேசும் நண்பர் குழு இணைந்து பேசும் அரட்டை அறையின் பெயர் தான் நிலாமுற்றம். அதன் பெயரில் இணையத்தளமும் என்னிடம் உள்ளது

நிலாமுற்றம்

ஓடியோடிக் களைத்த நாங்கள்
தேடித்தேடி இணையும் நிலாமுற்றம்!
பாடிப்பாடி பேசிப்பேசி எமைமறப்போம்!-ஒன்று
கூடிக்கூடிக் கலைவோமே.. தினந்தோறும்!

கனக்கும் இதயத்தை இலேசாக்க
திறக்கும் எங்கள் கலைக்கூடம்!
சுரக்கும் மகிழ்வூற்று,சுவையாக
பிறக்கும் நிம்மதி பேரானந்தமே!

அறைக்குள் இருந்து அவனியடங்க
அகலும்நம் நட்புச்சிறகுகளே!-அதனால்
குறையும் மனப்பாரம், குறையும் இடைவெளிகள்!
குறைகளும் கோள்குண்டணிகளும் கறைதானிங்குமே!

இதயத்தை இதயமாக மதித்திட-நமக்கு
இணையத்தில் கிடைத்தவினிய பொழுதுகளே!
வலயத்தை, நட்புவலயத்தை விரித்திட
குவலயத்தில் கொடுத்து வைத்தோமே!

அம்மாவின் பிறந்த நாளுக்காகவே இக்கவிதையும்.

அம்மாவுக்கு நிகர்...

விரிந்து கிடக்கும் பரந்த பூவுலகில்
பரந்து கிடக்கு ம்பந்த வெளிகள்!
கிடந்து துடிக்கும் இதயங் களுக்குள்
சுமந்தீ ன்றதாய் க்குநிகர் தான்,யார்!!

கண்ணுக் குமணியா ய்க்காப்ப வளுக்கு
விண்ணுக் குநிகராய் ஒத்த வளுக்கு
பொன்னுக் குப்புடம் பார்ப்ப வளுக்கு,
அன்னைக்கு அழகுப் பிறந்தநாள் இன்று!!

தாயை வாழ்த்த, வா! தாயே- என
தமிழ்த் தாயைஅ ழைத்தேன், அன்னநடைபோட்டே
சேயென் பேனாமு னையில்சிரித் தாள்,கவிதையாய்!
தாயை தாயால் அணைக்கு மிச்சேயே!!

இதயத்தில் இன்ப ஊற்று! - அம்மா உங்களால்!
உதிரத்தில் அன்பு நெகிழ்ச்சி!- அம்மா உங்களால்!
எண்ணத்தில் நம்பிக்கை ஒளி!- அம்மா உங்களால்!
உயிரில் ஒரு செருக்கு! உங்கள் மகளென- அம்மா உங்களால்!!!

காலமகள் கண்திறந்தாள் கவலைபல தீர்த்தாள்!
ஞாலமகள் சிரிப்பாள் நாமொன்று சேர!
பாமகள் சிரித்தாள் பரவிப்போ ற்றினாள்!
பாலமகள் சொரிந்தாள் முத்தமாய் வாழ்த்தை! வாழி அம்மா வாழி!!!

லண்டன் தமிழ் வானொலி, ஸீ ஐ தொலைக் காட்சியில் இடம்பெற்றது. ஸீ ஐ தொலைக்காட்சியினர் நான் ஒப்பிவிக்கும் காலப்பகுதியில் 'பிடிச்சிருக்கு பிடிச்சிருக்கு' சினிமாப் பாடலைத் தேர்ந்து ஒலிபரப்பி இக்கவிதையைத் தொடர்ந்து ஒலிபரப்பி ரசித்தனர். எழுதி நான்கு வருடங்கள்.

பிடிக்கவில்லை!

இங்கிலாந்து நாட்டிலிப்போ
வெந்துதகிக்கும் வெய்யில்
பிடிக்கவில்லை!

இங்கிதமறிந்து பழகமறுக்கும்
நண்பர்கள் சுயநலநட்பு
பிடிக்கவில்லை!

அங்கொன்றும் இங்கொன்றும்
விதமாய்நடிக்கும் உறவுகள்
பிடிக்கவில்லை!

பங்கம்தரும் விதமான இரகசியங்களை
பகிரங்கமாக்குவது
பிடிக்கவில்லை!

பணம்வந்ததும் பழையதை
மறக்கும் பாமரர்செயல்
பிடிக்கவில்லை!

மணந்தரும் மலர்களின் திறமைகளை
மெச்சமறுப்பது
பிடிக்கவில்லை!

மதந்தரும் மகிமைகளை
ஊடகமாக்கும் உன்மத்தரைப்
பிடிக்கவில்லை!

சினந்தரும் வதந்தியால் சீர்பெற்றநல்வாழ்வுகள்
சின்னாபின்னமாவது
பிடிக்கவில்லை!
யார்கெட்டால் என்னநான் வாழ்ந்தால்
போதுமென்ற சிந்தைகள்
பிடிக்கவில்லை!

பெயர்கெட்டால் என்னவிப்போ?
எப்படியும் வாழ்வோம்
என்பதும் பிடிக்கவில்லை!

பார்கெட்டால் என்னபதவிதான் பெரிது
என்றவர் போக்கும்
பிடிக்கவில்லை!

ஆர்கெட்டால் என்னஆம்பிளை நானெனும்
ஆடவரையும்
பிடிக்கவில்லை!

திறமைகள், கடும்முயற்சிகள்
கணக்கிலெடுக்காமற் போவது
பிடிக்கவில்லை!

புலமைகள் சிலபொழுதுகளில்
களவெடுக்கப் படுவதும்
பிடிக்கவில்லை!

தலைமைகள் தந்தவறுகளை
தம்கீழார் தலைகளிற் சுமத்துதல்
பிடிக்கவில்லை!

நிலைமைகளறிந்து தம்பெற்றோருடன்
ஒத்துநடவாத சிறார்களையும்
பிடிக்கவில்லை!

செய்யாத தவறுக்குத் தண்டனை
பெறும் கோழைகளைப்
பிடிக்கவில்லை!

செய்யாத தவறை
செய்ததாய் நிறுவும் சீற்றமும்
பிடிக்கவில்லை!

பெய்யாத மழைமுகிலாய்
சொல்லாத காதல்களும்
பிடிக்கவில்லை!

கொய்யாத மலராய்
கூரையைப் பார்க்கும் குமர்கள்மூச்சும்
பிடிக்கவில்லை!

சுற்றிவளைத்து சொன்னதையே
சொல்லும் சிலர்கதைகள்
பிடிக்கவில்லை!

மெச்சிவதைத்து காரியம் ஆற்றுவிக்கும்
கயமைகள்
பிடிக்கவில்லை!

தட்டிக்கழித்து கடமைகளை
தாமதமாக்குபவர்களைப்
பிடிக்கவில்லை!

நீட்டிநிமிர்ந்து நிதமும்நித்திரையில்
நேரம்போக்குபவர்களை
பிடிக்கவில்லை!

சொல்வதொன்று
செய்வதொன்று செய்பவர்களைப்
பிடிக்கவில்லை!

கொள்கையென்று இல்லாத
மனிதசகவாசமுந்தான்
பிடிக்கவில்லை!

கல்கவென்று தன்குழந்தைகளை
வழிநடத்தா பெற்றோரைப்

பிடிக்கவில்லை!

வெல்வதென்று
நோக்கமில்லாப் போட்டியாளர்களைப்
பிடிக்கவில்லை!
கட்டியவள் கண்கலங்க
கூதாட்டம் ஆடுமாண்வர்க்கம்
பிடிக்கவில்லை!

வெட்டியென
வீண்பொழுது போக்கும் எவரையுமே
பிடிக்கவில்லை!

பட்டியெனக் கிளர்ந்துபோய்
பச்சையாய்ப் பேசும்வாலிபர்களைப்
பிடிக்கவில்லை!

சிமிட்டிப்பேசி சமிக்ஞை கொடுத்துச்
சீரழிக்கும் சிங்காரிகளைப்
பிடிக்கவில்லை!

பெற்றவர்கள் முதுமையை
உணராத மகவுகள் தன்னைப்
பிடிக்கவில்லை!

கற்றவர்கள் மத்தியில் கனதியாய்ப்
பேசுமற்றவர் தரம்
பிடிக்கவில்லை!

கெட்டவர் சகவாசம் கூடாதெனும்
சொல்கேட்கா பிள்ளைகள்
பிடிக்கவில்லை!

பட்டவர் அனுபவங்கள் பாடங்கள்!
புத்தி தெளியாதவர்களைப்
பிடிக்கவில்லை!

நாழுந்தப்பு செய்யக்கூடும்
எனவெண்ணமறுக்கும் மாந்தரைப்

பிடிக்கவில்லை!

நாளுந்தப்புச் செய்து
மன்னிப்புக் கேட்கும் பாங்கும்
பிடிக்கவில்லை!

கோளுந்தப்புச் செய்யும்
தோடர்ந்த வினைத்திறனால்! நம்பாதவர்
பிடிக்கவில்லை!

நானுந்தப்புச் செய்து
நயம்பத் தோன்றியதோ? இக்கவிதை!
யாருக்குப் பிடிக்கவில்லை?

பாரதியார் நினைவில்

எட்டயபுரத்தின் பெயரை எம்முன்
பட்டயமென விட்டுச்சென்றவனே! உலக
விட்டத்தில் பரந்துவாழ் தமிழர்
மட்டத்தில் மங்காது சுடர்விடும் சூரியன் நீ!
அட்டாவதானமும் செலுத்தி அடிபணிந்து
அரியாலையூர் அம்புயமென் ஆதங்கமொழிகளே!

பச்சிளம் வயதில் 'பாரதி' யென பட்டங்கொண்டவனே!
பதினொரு வயதில் அப்படியென்ன பாதிப்புன்னுள்ளே!
அச்சமில்லை! அச்சமில்லை! யென அடித்துச்சொன்னதென்ன!
இச்சகத்தில் வாழுகின்றதமிழர் இதயமிடம் பிடிக்கத்தானோ!

பணத்துக்கோ பகட்டுக்கோ பாதிக்கப் பெறாதவன்!
வணக்கத்துக்கு உரியவன்! வாய்ச்சொல்லில் வீரன்!
கணக்கற்ற கவிதைகள் கனதியாய் கனன்றவன்!- தமிழ்
மணக்க மணக்க நயமாக இயம்பிநின்றவன்!

சாதியென சாதிக்கக் கூடாதென்றாய்! பெண்
சுதியர்க்கு பெரும் விடுதலை விரும்பிநின்றாய்!
நாதியற்ற நம்தமிழர் படும்பாட்டை நீயுயிரோடிருப்பின்
சேதியென கேட்டுநீயும் சென்றிருப்பாய் தானோ?

தாயென தமிழைத் தொழுதவனே! தமிழ்த்
தாயின் சேயீழத்தமிழர்நாம் தவிக்கின்றோமே!
வாய்பொத்தி வம்பெதற்கு எனநீயும் வாழாவிருப்பாய்தானோ?
ஆயிரந் தானானபோதும் அதுமவுந்தானுன்னால் முடியுந்தானோ?

கடல்கடந்தும் கலாச்சாரம் மறக்கும் தமிழர்க்கு நின்னுயிர்
உடல்கடந்தும் ஓதிச்சொல்லு ஒருசேதி! தமிழனென்று
தலைநிமிர்ந்து சொல்லச்சொன்னவனே! ஆதட்டிச்சொல்லேன்!
மனங்குளிர்ந்து மக்களுக்குப் புகட்டச் சொல்லுமையா!

பிறமொழியின் பெருமைகளை பிரித்துணர்ந்தவனே!
பிறமதத்துக்காயும் பலபாக்கள் புனைந்தவனே!
தமிழ்மொழி போலினியமொழியில்லை யெனத்துணிந்தவனே!
தரணிவிட்டு இளம்வயதில் தண்மதியேநீ மறைந்ததுமேனோ?

நுடிகள் என்ற அபிமானத்தை விட இவரின் கடும் உழைப்பில் பிடிப்புள்ளவள் நான்.

வேளை தான் வந்ததா? விதி தான் சிரித்ததா?

இதயம் பிழியும் துன்ப சேதி
சதையும் இரத்தமும் சேர்ந்தே தவிக்குது
இமயம் இன்று பிரிந்த சேதி
இழையும் துக்கவலையில் துவளும் நெஞ்சங்கள்!

ஏழையின் வீட்டில் பிறந்த சீமானே!
வேளை வந்ததா? விதிதான் சிரித்ததா?
பேழையில் உனைச் சுமக்கும் நாள் வந்ததே!
பேதையர் நாம் சிந்துகின்றோம்! பெருங்கண்ணீர்!

ஐயா! நீதமிழை தமிழாக உச்சரித்தாய்!
ஓய்யார நடிப்பில் எம்முயிர் குடித்தவன்!
ஓயாத உழைப்பின் எடுத்துக்காட்டு!
மெய்யான செயலில் மிளிர்ந்தவன்! சிகரம் நீ!

கருணா நிதியின் கனமான தமிழையும்
திருசெளந் திரராஜனின் கணீரென்ற குரலையும்
தருணா தருணங்களில் உன் நாவினில்
தாண்டவ மாடச் செய்தாய்! சிறந்தாய்!

பராசக்தி படத்திலே நுழைந்தாய்! பரிணமித்தாய்!
பலவேடம் புனைந்தாய்! பல்வேறு படங்களிலே!
நவவேடத்தில் நூறாவதாய் நவராத்திரி தனிலே!
நாவெழுபது படம்பங்காற்றி நம்மனம் பிடித்தாய்!

நாடுகள் பலவுன்னை அடையாளம் கண்டதையா!
ஏடுகள் பலநின்னப் பறை சாற்றியதே!
தேடிவந்ததே பலநிகரில் பட்டங்கள்! ஊனைத்தேடி!
கூடிவந்ததே விருது செவாலியர் பிரான்ஸிலிருந்து!

நடிகர் திலகமென ரசிகன் ஒருவனால்
நயமான பட்டம்சூடிய பாரதத்தின் திலகம் நீ!
நடிப்புக் கலையின் நாயகன்நீ யன்றோ!
துடிப்பு நின்றுபோனதே! துயருறுகின்றோம்!

கனல் தெறிக்கும் கம்பீர வசனங்கள்!
அனல் சொட்டுமே! அதிருமே அரங்கமே!
மனதில் நிறைந்ததே 'மனோகரா' வாக்கியங்கள்
மகாபலே வீரபாண்டிய கட்டப் பொம்மனிலே!

பத்மபூஷன் விருது தொளாயிரத்து எண்பத்துநான்கில்!
வித்தகனின் வச சேர்ந்து கொண்டதே பெருமை!
முத்தெனவே 'டாக்டர்' பட்டம் கொண்டவனே!
பத்தரை மாற்றுத்தங்கமே! பார்விட்டுப் போனாயே!

உன்சிறப்பு அளவிடும் ஒருசிறப்பு எனக்கில்லை!
தென்பரப்பு இந்தியாவின் தெருவெங்கும் உனையறியும்!
பலதரப்பு மாந்தரும் வியக்கும் பெருமகனே!
கண்சுரக்குதையா! கலை னுன் மறைவாலே!

தீபத்தில் தீபாவளி வாழ்த்து

தீபாவளி வாழ்த்தியம்ப விரும்பி
தீபநேயர்,ஆவளியில் ஆளாய்
ஆவலாய் வந்தேன் கேளிர்!
அரியாலையூர் அம்புயம் யானும்.

தமிழினமே! தமிழினமே! தங்கத் தமிழினமே!
வங்கம் கடந்தாலும் அங்கம் தமிழன்றோ!
எங்கும் எப்போதும் - மனம் ஏங்கும் எம்மொழிக்காய்
தூங்கும் உணர்வுகளை தொட்டெழுப்ப வந்தது தீபாவளி!

பொசுங்கிப் போகட்டும் பொறாமை இருள்!
வெதும்பி வேகட்டும் வேதனை இருள்!
நசுங்கிச் சாகட்டும் பகைமை இருள்!
அழிந்து புகையட்டும் அறியாமை இருள்!

உன்னில் விரியட்டும் நம்பிக்கை ஒளி!
மண்ணில் புரியட்டும் சாதனை ஒளி!
முன்னில் தெரியட்டும் தமிழீழ ஒளி!
கண்ணில் அறியட்டும் அகில வெளி!

தேசம் விட்டும் தேசம் வந்தாலும்
பாசம் போகாது இனப்பாசம் போகாது! -எதிரி
வேசம் நிலக்காது வீதிக்கி ழுப்போம்
நாசம் செய்வோம் அநீதிகளை, நாமொன்று படுவோம்!

ஒன்றுபடு வதுநன் றெனப்பட வில்லையா?
தொன்று தொட்டதுநம் தமிழினம் தவறில்லையா?
கண்டுவிடு வதொரு கரையி ல்லையா?
வென்று விடுவது தமிழீழம் இதுமுடிவு இல்லையா?

புதுமொழி

அன்பே!

இணையத்திலே உனை இனிய சந்திப்பு!
இதயத்தை நின்னிடம் பறி கொடுப்பு!
எனை நீ காதலிப்பது எனக்கும்
உனை நான் காதலிப்பது உனக்கும்
உள்ளே தெரிந்திருப்பினும்
இன்னும் இது இரகசியம்!

இல்லையில்லை! இரகசியம்
இருவருக்கிடைப்பட்டது! ஆகவே
இது இரகசியமுமன்று!

உனக்கு நானும் எனக்கு நீயும்
உதிராத புதுமொழி!

என்னைச் சந்திக்கவேண்றே நீ இணையம் நாடுவதும்
உன்மடல்களுக்காக தனிமுகவரி நான்
அமைத்ததுவும்
என்ன தான் காரணமோ!!

ஒருதலைக்காதல் என்று
ஒருதலையாய் கூற
ஒப்பவில்லை மனம்!

இருதலைக்காதல் என்று எளிதாய்க்கூற
எனக்குள்ளிருக்கும் ஏதோவொன்று தடுக்கிறது!

எப்போது உன்னுதடு திறந்து
தப்பாது கொண்டிருக்கும்
சிப்பிக்குள் முத்தாம்- காதலை
செப்புவாயோ! ..காத்திருக்கிறேன்!

தீபத்தில் ..

உலகேழும் ஆளுகின்ற ஜங்கரனே வாருமே!
உலகம் பூராவும் ஒளிரும் தொலைக்காட்சியாம் தீபமே!
'திலகம்' என இங்கிலாந்தில் புரியும் வாசமே!
புளகம் கொண்டோமே! நாளுமே! போற்றுவோமே!

தீபமே!

பரபரப்பாய் பார்முழுதும் பவனி நீ!
குறுகுறுப்பாய் சிலரின் கண்களில் நான்!
சுறுசுறுப்பாய் பணிபுரியும் அறிவிப்பாளர் அனஸ்!
கலகலப்பாய் வந்தனங்கள் கூறுவது அரியாலையூர் அம்புயமே!

பல்சுவை ஆக்கங்கள் தந்து நீயும்
நில்குவை நிமிர்ந்து! நித்திலமாய் துலங்கு!
நல்லவை தருவாய்! நானிலமே போற்றும்!
வல்ல அவை கொண்டாய்! வாழியநீ பல்லாண்டு!

தெளிவாய் தெரிவாய்! திங்களாய் மிளிர்வாய்!
பரிவாய் புகல்வாய்! பகலனாய் சுடர்வாய்!
வருவாய் வனப்பாய்! வதிவாய் வாஞ்சையாய்!
தருவாய்! கற்பகதருவாய், வளர்வாய்! வாழ்வாயே!

அறிவிப்பாளர்கள் அலுவலர்கள் அனுபவபொறியாளர்கள்
அரும்பணியாலே ஏற்றம் கொண்டாய்! வாழியவே!-உன்னால்
அமுதமாம் தமிழ்பேசும் மாந்தர்கள் அகமகிழ்வரே!
அகிலமே பயன்பெறும் அவனியே போற்றிடும் வாழி! வாழி!

இணையத்து இஸ்லாமிய நண்பர்களுக்காக அசைந்தது என்பேனா.

நோற்பாரே நோன்பு

பிறை கண்டனர்! மனநிறை கொண்டனர்!
மறைவழி மார்க்கமென மனங்கொண்டனர்!
இறை அல்லாஹ்வின் ஈடிலா இணையடி
முறையாகவே பற்றினர்! உற்றனர் முழுநோன்பு!

நோய் நொடியுற்றவர் நோற்பாரே நோன்பு!
வாய்வழி நீர்கூட துறப்பாரே!, காப்பாரே!
காய்கின்ற வயிற்றுடன் காலை நேரம் சுழன்று
ஓய்கின்ற போழ்தினில் ஊணுறக்கம் கொள்வாரே!

எக்காலமாகிலும் வாழ்வினில் மக்கா போவதும்
முக்காலம் முழுதொழுகை பண்ணுவதும்
சிக்காரச் செய்வதும் சீர்கண்டீர் என்பாரே! – அவர்க்கு
அக்காலம் நிலாவெந்தன் ரம்ஜான் வாழ்த்துக்களே! வாழி!

காதலி.. காதலி!

இளமை என்கண்ணை மறைக்க நீமட்டும்
இனிமை சேர்த்தாய்! இதயம் இலேசானது!
இளமயில் உந்தன் நினைவே சுகசுமையானது!
தனிமை என்னைத் தகிக்குதடி, காதலி!

கண்ணாடி பார்க்கையில் தெரிவது நீயாக
தள்ளாடும் மதுவண்டாக என் மனதாக
கண்ணோடு இமை சேர்க்க தவிக்கிறேனே!
துள்ளியோடும் மானாக நீவாடி! காதலி!

கண்டதும் கொண்ட காதல் அல்லவிது!
திண்டாடும் எம்மனம் தன்னாக இணைந்து
கொண்டாட இதுதான் இனிய வாய்ப்பு!
சிண்டோடு புன்னகை சிந்தவாடி! காதலி!

துடிக்கும் உன்னிமைகள் சொல்லி விட்டகாதலை தினம்
படிக்கும் என்னிதயம் படும்பாடு நீயறியாயோ!
துடிக்கும் உன்னிதயவோசை பருத்தி மலராய்
வெடிக்கும் நாளிதாகட்டும் வாயேன்டி!காதலி!

வாழ்வதல்ல முக்கியம். உன்னுடன் வாழ்வதே சித்திரம்!
தாழ்வோ ஏற்றமோ தத்தை யுன்துணை கிடைத்தால்
மூழ்கலாம் இனிமைக்கடல்! முழுமைபெறும் என்பிறவி!
போழ்தெலாம் உன்னுடன் போக்கக்காதலி! காதலி!

மகோன்னதங்களே நீங்கள்!

புத்திரனோ புத்திரியோ வென,பல்லெதிர் பார்ப்புடன்
பெற்றவள் சுமந்துனை பத்திரமாய்ப் பாருக்கீந்திட
மத்தாப்பென மலர்ந்திருக்கும் பருவத்திலே, மகவே!
உற்றவர் உறுநண்பர் உன்கல்வி ஊனுறக்கம்
அத்தனையும் பெரிதல்ல, அடுத்தவனின் ஆதிக்கம்
அற்றிருத்தல் பெரிதென்று, அகவேள்வி வளர்த்து
புத்தம்புது பிறவி 'போராளி'யெனக் கொண்டாய்!

கண்டதுகள் பலதும்கயிட்டமின்றிக் கடித்து, கடமையே
கண்ணாக காரியமே குறியாக கண்ணுறக்கந்துறந்து
விண்ணதிரச் சன்னங்கள் வீறாப்புடன் பொழிந்தாய்!
அண்ணன் பிரபாகரன் ஆணைகளை அணிந்தாய்!-உன்
எண்ணம்போல் புலிவீர(ரி)னென பொலிவு பெற்றாய்!
வண்ணத்தோட்டத்திலே வகைவகையாய்ப் பூக்கள்!
கேணல், மேஜர், கொமான்டோ, லெப்டினன்ட் எனயாவும்
பூணவீரும்புவதோ தமிழ்மண் சுதந்திரக் காற்றன்றோ!

காடுகள் பலவையும் காற்றென அனுபவித்து
கனதியாய் கடுஞ்சமர் புரிந்தாய்! ஆனாய் மாவீரன்!
எதிரியின் பிடிதவிர்த்திட கழுத்தினின்று நஞ்சுமிழ்ந்தாய்!
காலங்காலமாய் கருத்துகளில் செதுக்கப்பெற்றாய்! மாவீரன்!
காயத்தை காணிக்கை கொடுத்து கூட்டங்கூட்டமாயெதிரியை
கடும்புலியென அழித்தாய்! குலைநடுங்க வைத்தாய்! மாவீரன்!
காசினியில் காத்திரமானவர்கள் ஈழத்தமிழர்கள்- காட்டியவன்
கண்கசிந்து பூசிக்கின்றோம்! கண்கசிந்து பூசிக்கின்றோம்!

தமிழுக்காக தன்னுயிரையே தனிமுதலிடத் துணிந்தவன்!
தனிமுதலிட்டதால் தரணியில் தனிப்பெயர் பெற்றவன்!

தந்தை, தாயினை பந்தியில் முந்தியிருக்கச் செய்தவன்!
தமிழ்த்தாயின் வீரத்திலகமுலகினில் துலங்கிட வைத்தவன்!
தமிழையே தீபமென தன்னுயிரூற்றி ஏற்றியவன்!
தன்னுயிரைத் தன்னினத்துக்காகத் தாரைவார்க்கும் தியாகநெஞ்சினன்!
தாய்ப்பாலே தமிழெனத்தான் சுவைத்தானோ! தமிழன்!-நீவிர்
தொன்மை கொள்தமிழின் தங்கக் குழந்தைகளன்றோ!

மகோன்னதங்களே! நீவிர் தூங்கிடும் இல்லம்
'மாவீரார் துயிலும் இல்லம்' மீளத்திறந்தது!
அகோரமாய் அடுத்தவன் உழுதே பதம்பார்த்தாலும்
சாவில்லையுமக்கு! சரித்திரங்கள் நீங்களன்றோ!
ஆகவேதான் ஆண்டுகள் ஏழின்பின்னும் யாழ்மண்ணில்
பூவிலே மாலைகள், போற்றிடும் தீபங்கள்
காவிடும் கவலைகள்சக தமிழனென்ற கர்வங்கொண்டு
வீசுகின்றோம் பாச்சாமரங்கள்! துயிலுங்கள்! தோழர்களே!

விஜதலை பத்திரிகையில் பிரசுரமானமானது

மாமனிதன்

பொன்னம்பலத்தின் வாரிசு! பொதுநலத்தின் ஆயன்!
சொன்னசொல்லில் தைரியம் சொட்டிடும் நேயன்!
திண்ணமென இவன்செயல்கள்! அகில இலங்கைத்
தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தங்கத் தலைவன்!
தென்னிலங்கை தேசத்திலும் திண்மைபேசியதமிழன்!
பன்னலகாரியம் ஆற்றிடும் பகீரதன்! துப்பாக்கிச்
சன்னமென இவன்சொற்கள்! சந்திரிகா சபையறியும்!
கன்னம் வைத்தே கொன்றிட காரணமேயதுதானே!

சட்டத்தின் சந்துபொந்துகள் சரளமாய்த் தெரிந்தவன் உலக
மட்டத்தில் தமிழனாய் கருத்துகள் தெறித்தவன்! - கால
கட்டத்தின் தேவைகள் தெரிந்தவன்! தீர்த்தவன்!
எட்டத்து தேசங்கள்பல எட்டியவன்! எங்களுக்காய்
எட்டுத்திக்கும் எதிர்க்குரல் எழுப்பியவன்! எந்தலைவன்!
பட்டத்தினைப் பயன்படுத்தத் தெரிந்தவன்! படுதீரன்!
இட்டமாய் எமக்காய் உழைத்தவன் இல்லையெம்முள்!
திட்டம்போட்டே சந்திகாபடை சுட்டன்றோ தீர்த்தனரே!!

நாமகளை நாவிலேகொண்டவன்! நற்றமிழ்ப்பேச்சாளன்
பாமரர்களின் கண்ணீர் துடைத்தவன்! கண்ணியமானவன்!
பேசாது இருந்தால் பிரச்சனைகள் அணுகாது, ஆனால்
பேசாதிருப்பதாயின் வாழ்விலேது பயன்?சொன்னவன்!
சாவின்பின்னும் வாழ்வுகொடுக்க சரித்திரமான மணிமுடி!
மாமனிதனென புலிப்படையாலே மகுடமணிந்தவன்!

மாமனிதனே! நீயெங்கள் பெருமைபகன்றிடும் மாணிக்கம்!
பாவிலுன்னைப் பாடுவதால் பெருமைகொள்வாளே! தமிழ்த்தாய்!

ஐயாவுன்னை அழித்தனர் அநியாயமாய்! அழுகின்றோமுள்ளே!
செய்யாத குற்றத்துக்கு மரணதண்டனையோ! சீறுகின்றோம்!
கையாலாகாத்தனம் கயவனுக்கு கைவந்தகலை நீயறிவாய்!
தையானதும் பற்றும்நின்னினைவு! பற்றியெரியும் நெஞ்சமுமே!
கைதானவர்கள் பலரை நின்கடமையென விடுவித்தாய்! இன்னும்
செய்தாகவேண்டிய கடமைகள் பலவுண்டு எழுந்துவா!
மெய்யாகப் பாடுபடும் போக்குக்கொண்டவனே! கண்திறந்துபா!
பொய்யானவர்கள் போடுமரிதாரம் அழிக்கவா! பிறந்துவா!

கடல் கடந்த பலரின் ஏக்கம் இது.

நின் மடியில்

தாயே!

துயரம் அதிகமாகிறது! ஆகத்தாயே நின்மீதுள்ள
பாசமதிகமாகிறது! உன்னைத் தழுவிடநம்
நேசக் கரங்கள் துடிக்கின்றதே! நம்மிதய
தாகம்நீயுமறிவாயோ! தணிவதுதான் எப்படியோ!

தாயே! நீசுதந்திரச்சேலை கட்டிநிற்கும் இனிய
தூயநாள் தானெப்போதோ? நாள்தான் எப்போதோ?
சேய்நாங்கள்! சேர்ந்தணைக்கத் தவிக்கின்றோமே!
காயமழியுமுன்பே காலந்தான் கனிந்திடாதோ?

நின்மடியில் நானும் சாய்ந்து இதமாகவே
தென்னங் காற்றின் ஸ்பரிசம் உணரேனோ?
பனங்கழியில் பலகாரம். பனாட்டு புசிப்பேனோ?
இனசனங்களோடு கூடிக்களிக்க நாள்தான் வாராதோ?

ஆடியிலே கொழுக்கட்டை. ஆடிக்கூழ் அத்தோடு
ஆடிவரும் நல்லூரான் தேருந்தான் பார்ப்பேனோ?
வாடிவிழும் பயிருக்கு நீர்வார்த்து மகிழ்வேனோ?
நாடிவரும் சொந்தங்களுடன் கூடவிருந்து அருந்தேனோ?

மா பலா வாழைவிளா கனிகள்பறித்தே சுவைப்பேனோ?
தீதிலா இளநீர் தேனெனத் தண்ணீரெலாம்
நிதமும் நான்குடித்து நீட்டிநிமிர்ந்து துயிலேனோ?
பதமாய்ப் பச்சரிசிப் பொங்கல்படைத்துண்ண மாட்டேனோ?

எழில்தரும் கட்டிடங்கள் இயந்திரத்தில் சாதனங்கள்
பதில்தரும் தொலைபேசி பார்க்கநல் பணிமனைகள்
இதம்தரும் சிலபொழுதே! இதயம் தேடுவதோ மன
வளந்தரும் தாய்நாடே! வணங்குகிறேன் உனைநானே!

எழுத வரம்!

புழுதியெனத் துன்பங்கள், பூஞ்சணையாய்க் கவலைகள்!
கழுதையாய் மனது காவியே களைத்தாலும்
எனக்கு எழுத இல்லை வரம்!

கனக்கும் சிந்தனைகள்! சிறகடிக்கும் கற்பனைகள்!
துணைக்குவர தமிழ்மகள் தயார் தான்! -எனினும்
எனக்கு எழுத இல்லை வரம்!

இதயச்சுவரை இடித்தே தள்ளும்
ஊணர்ச்சி அலைகள்! உறக்கம் கெடுக்கும்!
எனக்கு எழுத இல்லை வரம்!

நிரம்பி வழியும் எண்ணநுரைகள்
புலம்பிக் கொட்ட புலமை இருந்தும்
எனக்கு எழுத இல்லை வரம்!

ஏகாந்தமிருக்கு! எழில்தரும் சூழல் உண்டு!
ஏராளமாயிருக்கு எண்ணப்புதையல்!
எனக்கு எழுத இல்லை வரம்!

சமாதானம் கூறும் வெள்ளைத் தாள்கள்!
சரியாகவே எழுதும் குமிழ்முனைப் பேனா! - எனினும்
எனக்கு எழுத இல்லை வரம்!

சமுதாய சிந்தனைகள் சரித்திர சம்பவங்கள்
குமுறியெழும் கொள்கைகள், குருட்டுக்காதல்கள்
கொட்டியே பரப்பிக் கூறவே இருந்தும்
எனக்கு எழுத இல்லை வரம்!

சுதந்திரதாகம், சுதந்திர சுபாவம், சுயமுயற்சியுண்டு!
இதந்தரும் உற்சாகமுண்டு! இரசிக்க இதயங்களுண்டு!
எனக்கு எழுத இல்லை வரம்!

இத்தனை இருந்துமென்ன! இல்லை உடற்சுகம்!
எண்ணங்கள் மோதும் வேளை
இயங்கமறுக்கும் எனது அவயவங்கள் - அதனால்
எனக்கு எழுத இல்லை வரம்!!!

அன்புள்ள அப்பா

இதயத்தாழி திறந்து எண்ணத்திரவியந் துழாவினேன்!
சதையின் ஒவ்வொரு அணுவும் அழுகுது அப்பா!
கதையென ஆனீரோ, கடைக்குட்டி தனைப்பாரீரோ!
வதைகின்றோமே! வாய்க்குவாய் வியக்கின்றோமே அப்பா!

அழுகையும் தருமத்துடன் ஆனந்தமுந்தரும் நினைவுகளே!
பொழுதும் கணங்களை பக்குவமாய்ச் செலவுசெய்தவரே!
தொழுதுநிதம் நமக்காய் மும்முரமாய் வாழ்ந்தவரே!
பழுதுபடாது உங்கள்நினைவு, படுசுமையாய் அழுத்துகிறதே!

நிதானம் செயல்களில்! நேரத்துடன் கடுங்காதல்!
சதாதன் மனைவிமக்கள் சிந்தனையே தன்மூச்சு!
இதழோரம் எப்போதும் இனிக்கும் புன்சிரிப்பு!
பதட்டம் தானன்பை வெளிக்காட்டும் வகையாகுமே!

அவையத்து முந்தியிருக்கச் செய்தவெம் தெய்வமே!
வகைதெரியாது வெம்புவதன்றி வேறென்ன நாம்செய்வோம்!
ஐயனே! நீர் அருவமானபோதும் அருகிருந்து காக்கவேண்டும்!
வையகத்தில் நீர்வந்துதித்த பொன்னாளின்று! வணங்குகின்றோம்!

பல்கலைக் கழகவாழ்வின் அழுத்தத்தை நண்பனுக்குத் தெரிவித்து..

காத்திரு! கவிதை வந்தது!

நண்பா!

நாம்பகர்ந்த பொழுதுகள் நம்கவலை தனைமறந்து
தேன்கலந்த பலாவெனவே
இனித்ததென்னவோவுண்மைதான்!

நானதனை மறுக்கவில்லை! மறுப்பதாயின்
ஏனிந்தக்கவிதைதான்?

அகிலத்தினோட்டத்தில்...

பூக்கின்ற மலர்யாவும்
ஆண்டவனை அலங்கரிக்க
ஆயப்படுவதில்லை!

பூர்க்கின்ற மனிதர்கள்யாவும்
நண்பர்களாய்
ஈர்க்கப்படுவதுமில்லை!

தேவையானது, தேவைக்கற்றது
தேவையின்றிப் பேசுகின்றோம்!
ஈவிரக்கமின்றி நகர்ந்திடும் நிமிடக்கம்பி!

ஈவேது? எண்ணிப்பார்த்தால்
ஈவே... இனிமைதரும் நகைப்புத்தான்!

காலமெனைக் கேள்விகேட்டு
கைதட்டி நகையாடும்
காலமெனக்கு வேண்டாமே!

வேளையுள்ள போதே

வேலைகளை யான்முடிக்க
வேண்டியவளாய் நானுள்ளேன்!

காய்கள் கனியானசேதிகேட்டு
களிப்பாய்நீயும்! - அதுமட்டும்
காரியமே என்குறியாக
கடமையிலீடுபடுவேனே!
காத்திரு நண்பனே!

எழுந்து வந்தேன் எழுதி விட்டேன்!

எங்கேநீ, எடுத்துவா எனக்கென்று இனியகவிதை!
இங்கிதமாய் மலர்ந்திருக்கு இனியதினம் - காதலர்தினம்!

அன்பென்றால் என்னவென்று அகத்தினுள்ளே அறைந்தவளல்லோ!
முன்பெல்லாம் முக்கனியாய் மொழிந்தவளல்லோ! – ஆனாலின்றோ
என்முன்னே இங்கில்லை! ஏதாச்சோவுனக்கென்று ஏங்கும் மனம்!
எங்கிருந்தாலும் எழுந்துவா! எழுதிச்செல்லு ஒரு சிறுகவிதை!

நானறியேனேதென்ற காரணத்தை ஆயினும்நான்
ஊனுறக்கம் கொள்ள இயலாதபோதிலும் எழுதுகிறேன்!
ஊரறிய உருவங்கள் இணையத்தில் தான்மட்டுமல்லகாதல்!
நாமுறங்கும் நினைவுகள் தந்திடுமேஇனிமை! அதுவும் காதலே!

எழுந்து வந்தேன்! எழுதிவிட்டேன்! நீநினைத்த கவிதை!
இங்கிதமாய் மலர்ந்திருக்கு இனியதினம் - காதலர்தினம்!

இல்லை நாட்டம்!

பாறையாய் அழுத்தும்! பதட்டமே எஞ்சும்!
பாவையிவள் பாதை தேடுவாளே! பரிதவிப்பாளே!
பாடையில் போகினும் பாவிநெஞ்சம் வேகுமோ!
பாவினில் வடிப்பதால் பாரமும் குறையுமே!

இதயம் துடித்திடும்! எண்ணமோ தழும்பிடும்!
நிதமும் நெஞ்சமோ நீண்ட தவிப்பினில்!
வதையும் மனம்! வாட்டிடும் தனிமை!
எதையும் ஆற்றிட வகையன்றியே வாடுமே!

முன்னே விரிந்திட்ட இலட்சியத் தோட்டம்!
வுளர்ந்ததோ வண்ண வண்ண மரங்கள்!
தன்னாலே வளருமா? தண்ணீரும் வேண்டுமே!
தளர்ந்திடாது தந்திடத் தேவை! உற்சாகம்!

மனிதமனங்களோ மலர்த்தோட்டம்! மனவண்டும் தினம்நாட்டம்!
கனியப்பேசி கவலைமறந்து களிப்புத் தேனீட்டம்!
மணிகள் நகர்வதே மறதியின் தேரோட்டம்! - மனம்
இணிக்கப்பேசலாம்! இல்லையே அதற்கும் நாட்டம்

விசாலமவள் உள்ளம்

வந்துநான் அவதரிக்கு முன்னரே, இறைவன்
ஈந்தான் சுய அவதாரம்! அவளே தாய்!
எந்தன் சிந்தனையை சுவீகாரம் எடுத்தவன்!
வந்தனைக்கு உரியவள்! வசீகரச் சுரங்கம்!

முன்னதாகவே என்றேவை தெரிந்த தாதி!
தன்னாகவே உழலும் தனிப்பெரும் தந்திரி!
ஏந்நேரமும் எம்வளர்ச்சியில் கைகொடு சிநேகிதி!
நன்னாகவே வாழணும்! நாமுமதில் மகிழணும்!

விசாலமவள் உள்ளம்! வேண்டுவது அவள்பணி!
அசராத கரிசனை! ஆக்கத்திலே பிரியம்!
தளராத பிரியம்! தாங்குவதே தன்னோக்கம்!
உசாரான வார்த்தையாலே உலகையேவிலை பேசுவாளே!

அதட்டலும் அன்புதான்! அணைப்பும அன்புதான்!
அண்மித்து நடந்தாலந்த இடமுமே அன்புதான்!
பிதற்றலும் அன்புதான்! செய்சிறு பிழைகளும் அனபுதான்!
அதனுள்ளடக்கமான இலக்கணமே அன்புதான்!

இனியும் பிறப்பார்கள் பைத்தியங்கள்!

இதயம் இன்னமும் ஏன் துடிக்கிறது?
ஏன்தெரியுமா?
இப்படியுன்னால் இரணப்பட

இமைகள் இன்னும் ஏன் துடிக்கிறது?
ஏங்கும் உன்விழிகளுக்கு அச்சுறுத்தவோ!

நீ நினைக்கும் போது மட்டும் என்னால்
உன்னை நேசிக்க முடியாது! – ஏனெனில்
என்னுள் ஓடுவதும் இரத்தம் தான்!

உன்னனைக் கோபிக்கவே பயப்படுகிறேன்!
என்கோபம் உன்னைத் தகித்து விடுவோமென!

எனைவிட்டு நீ விலகியே இரு!
எனை அணுகுவதும் விலகுவதும் கொடுமை!
இனியும் இவ்விதயத்துக்கு இல்லை வலு!

நானுன்னைச் சந்தித்தது நினைக்காமல் நடந்தது!
நீயென்னைப் பிரிந்திரு நினைத்தாவது!

காதல் வாழ்க்கையில் வாசந்தரும் சோலையல்ல!
சோகம் தரும் மனப்பிரமை!, ரோகிகள் நாம்!

கவிதைக்கும் கதைக்கும் கருதரும் விருட்சம் அது!
வனிதைக்கும் வாலிபனுக்கும் வாதைதரும் விடம் அது!

நீயும் எடு எழுதுகோல்! ஏதாவது கிறுக்கு!
இருக்கிறார்கள் இன்னமும் பித்தர்கள்!

எதிர்காலம் கண்ணை மறைக்க அநுதாபத்துடன்
இனிக்க இனிக்க சுவைப்பார்கள்!

இனியும் பிறப்பார்கள் பைத்தியங்கள்!

மரத்தடி.கொம் இணையத்தளத்தில் போட்டியில் இடம் பெற்ற கவிதை. மரபுக் கவிதை அவர்களுக்குப் பிடிக்கவில்லைப் போலும்.

கவிதைப் பெண்ணாள்

மாலைநேரம் பந்திவிரிக்கும்! மதிமுகம் தலைகாட்டும்!
நாளையெனக்குள்ளது நல்லதொரு வைபவம் - அந்த
வேளையை நினைக்கையில் வெண்பனி நெஞ்சினில்
மூளையின் ஒருமூலையில் அரிவண்டென பெருமச்சம்!

பாவையென்னையும் பலவைம்பது இணைவிழிகள்
பார்வை யளவிடுதலாம்! பதட்டமெனக்கு வாராதா?
தேர்வினில் எத்துணை இணையில்லா எழில்களே!
பூவைநான் எதற்குமே பங்கேற்கணும் எடுப்பாக!

பின்னுகின்ற கால்களே இன்றுமட்டும் பொறுங்கள்
மின்னுகின்ற விழிகளே மென்மையைப் பேணுங்கள்
மெல்லுகின்ற வார்த்தைகளே இதமாய் வாருங்கள்
சில்லென்ற கைகளுக்கு நல்லாதரவு சேருங்கள்!

தமிழே என்சேலையாகிட தலைப்புப் பொட்டாகிடும்
அமிழும் கருத்துப் புன்னகை! சுந்தம் அணியாகிடும்!
கமழும் தைலம் எதுகையே! மோனையே இதழ்ச்சாயம்!
பவளமென அட்சரங்களே! விரல்நகங்கள் பளபளக்குமே!

கணனியூர்தி ஏறுவேன் கடக்கும் முறை தேடுவென்
இணையப்பாலம் சேருவேன்! இணையத் தளமிறங்குவேன்!
இணையும் நெஞ்சங்களிங்குமே! உலகம் பூராவிருந்துமே!
பருகும், தமிழ்விருந்துமே! பரீட்சையரங்கம் மரத்தடி!

முகம் காட்டமுடியாத சில நண்பர்கள் தாங்கள் யார் என்று முழுதாகத் தெரியப் படுத்த மாட்டார்கள். அப்படி ஒரு நட்பு எனைக் காயப் படுத்தியபோது..

காயமானது என் மனமே!

காயமானது என்மனம்! கவிதை பாடுமோவுன் நெஞ்சம்!
தூயதாய் நீநினைக்கும் தோழமைதான் ஆனபோதும்
மாயமான நின்செயலால் மயக்கம் கொள்ளயானும்
சேயல்லநீ அறிவாய்! சீண்டித்தான் பார்ப்பதேனோ!

இலைமறை காயெனவே இருந்தாலும் கொள்கையுண்டு!
தலைமறைவாய் நீயிருந்து வான்திரை விலக்கினாயோ!
வரைமுறை கடந்து வானமழையாய் வந்ததுசீற்றம்!
வன்முறை கலந்தது வார்த்தை! வெந்ததுன் நெஞ்சமுந்தான்!

ஏறிவிட்டேன் எற்றமதில் ஏற்றிவிட நீநினைத்தாய்!
எட்டியானும் உனையுதைத்து ஏற்றமெனக்கு வேண்டாமே!
தேறிவிட்டேன் நானுன்னால்! தலைதாழ்ந்த நன்றிகளே!
கூறிவிட்டேன் உட்கிடக்கை! கூடியளவு மன்னிக்கணும் நீ!

உன்னெண்ணமதில் இல்லையேதும் வஞ்சமுந்தான்! – என்றபோதும்
எனையென்னால் மாற்றிவிட முடியவில்லை எள்ளளவும்
உன்னைநீ வெளியே காட்டாத காரணத்தால்
சொன்னபடி போவேனே மறைந்து சீக்கிரமே!

நட்பு

ஒடுங்கிடும் உயிரை ஓட்டிடும் உண்மைநட்பு!
நடுங்கிடும் கோழைக்கு வீரமூட்டும் வண்ணநட்பு!
தடங்கித்தான் வீழினும் தண்மைதரும் தங்கநட்பு!
முடங்கித்தான் போயினும் எம்மிடமேகும் இனியநட்பு!

சோகத்தை கொட்டலாம்! சுகத்தைக் கொண்டாடலாம்!
வேகத்தை விறுப்பூட்டலாம்! வேலைகளை விதிக்கலாம்!
தாகத்தை, மனத்தாகத்தை முழுதாய் முன்வைக்கலாம்!
பாகத்தைக் கூடபயமின்றி பத்திரமாய் எழுதிவைக்கலாம்!

அன்னையினன்புக்கு ஈடில்லை ஆனபோதும் அதனெல்லை
தன்னையுந் தொடவல்லது! தன்னலமற்ற புண்ணியநட்பு!
முன்னைப் பிறவியின்பலன் தன்னால்கிட்டும் இன்னட்பு!
என்னை யேற்றமுறச் செய்வதே இந்நட்பு! நம்புங்கள்!

அன்புக்கு அம்மா!, அறிவூட்டும் அன்பு அப்பா!
முன்புபிறந்த சகபிறப்புகளின் பாசமும் உண்டெனினும்
தென்புடன் தெளிந்த கருத்துந்தர நட்பொன்றாலாகும்!
என்பிரச்சனை இதயம்மாறி தீர்வு பதிலாகுமன்றோ!

தாயாய்த் தந்தையாய், தன்துணையாய் சிந்தித்து
தூயதான தீர்மானந் தரவல்லது உண்மைநட்பு!
இணையமோ, எதிரிலோ கருத்துகள் இணைந்ததால்
இதயந்திறந்திட இனிமையில் திளைத்திடத் தேவை,நட்பு!

லண்டன தமிழ் வானொலியில் தந்த தலைப்பிற்காக..

கனிந்து வந்தது கார்த்திகை

கதவைக் கூடத்திறக்க இல்லை எமக்கு கொடுப்பனவு!
உடலைத் துளைத்து உயிரை வதைக்கும் கார்குளிர்
மழலை, விடலை முதல் முதியோர் உதட்டுமுணு முணுப்புதிர்வு
அதனை எமக்கு அசைந்தே சொல்ல, கனிந்து வந்தது கார்த்திகை!

தமிழைத் தன்மொழியாய்க் கொண்டதாலே கொழுத்தப்பட்டான்!
குறைந்தே மதிக்கப்பட்டான்! தரம் படுத்தப்பட்டான்! அதை
அழித்தே தீர்ப்போம்! எனவெழுந்த வீரன் பிறந்தநாளைச்
சுமந்தே கூறக் கன்னம் சிவக்க கனிந்து வந்தது கார்த்திகை!

சாவதற்கல்ல தமிழினம்! சாதனை படைக்கட்டுமெம்மினம்!
சரித்திரம் எம்திறன் சாலவே சாற்றிடத் தேவை தளராமுயற்சி!
சந்ததியை சிந்திக்கச் செய்திடு! என்றே கூறிட
செந்தமிழர்க்கு சேவை செய் வான் ஒலியில்.. . . கனிந்தே வந்தது
கார்த்திகை!

தாயே சேயைத் தீனியாகக் கொண்ட காலம்..

கடலம்மா! காணுமம்மா!

தாயே! கடலம்மா! எம்மைத்
தவிக்கவைத்தது போதுமம்மா!
சேயினையும் தாயினையும் சேர்த்தே
அடித்துப் போவதேனம்மா!

தேயமே துக்கத்தில் தேம்புவது
காதில் விழுந்ததாம்மா!!
நீயெமக்கு இரங்கணுமம்மா!
நீடூழி வாழ விடணுமம்மா!

கோழி மிதித்துக் குஞ்சுசாவதோ!
கோடிக்கணக்குக் கண்ணீர்வடிப்பதோ!
ஊழிச்செயலின் பாழும்விதியிதோ!
ஓடித்தப்ப முடியாது உயிர்களழிவதோ!

ஆக்கிவைத்தாய்! வாழவைத்தாய்!
அலையிலடிப்பதேனம்மா?!
பாக்கியின்றி யத்தனையும்
பகலிரவாய்ப் பெயர்ப்பதேனோ?

தூக்கமின்றி துயரக்கடலில்
துடிக்கவைத்தே அழிப்பாயோ!
மக்கள் நாம்மரணபயம்
தாக்குவதால் தவித்துப் போனோமே!
தமிழினமே! தமிழினமே!
தவித்துப் போனதெம்மினமே!
அமிழும்துக்கம் அறிந்துநாமும்
அழுதுபுலம்பி இலாபமில்லை!
இது தருணம்! இது தருணம்!
ஈகைக்கரம் நீட்டுங்கள்!

இழப்பவர்கள் தொகை
இதனாலேனும் குறையட்டும்!
இருப்பவர்கள் எண்ணிக்கை
இத்தோடு நிற்கட்டும்!
இனிமேல் நாம் ஈட்டிடலாம்!
இருப்பதை ஈந்திடலாம்!

தமிழினமே! தமிழினமே!
தவித்துப் போனதெம்மினமே!
இது தருணம்! இதுதருணம்!
ஈகைக்கரம் நீட்டுங்கள்!

அன்னையர் தினம் அனைவருக்கும் பிடிக்குமே.

அம்மா! அம்மா!

வானவெளியில் வண்ணவுலாப் போகிறேன் யானும்
காணுமிடமெலாம் தாயின் நிழலே! தாலாட்டுமே!
மீனமென தாயன்புக் கடலை ஊர்கோலமிடுவனே!
நானுமவளன் பினாழமளத்தல் தானாகுமோ! மடமையே!

மண்ணாகி யெமைத் தாங்குபவளே சரணமம்மா!-கல்விக்
கண்ணாகி மனவெளி நிரப்புபவளே சரணமம்மா!
பெண்ணாகி யெமைப் பேணுபவளே சரணமம்மா!-உயிர்ப்
பண்ணாகி நாவினிலே சாகும்வரைவலம் வருபவளே சரணமம்மா!

பிறந்தோம் பூவுலகிலே! புடர்ந்தது நின்கரமென்மேலே!
இறைவன் எடுத்த அவதாரம் நீயென்பதாலா?-நினை
மறவேனே! மறந்தால் நானும்முறையாக வாழ்வேனோ?
உறவேனோ நீயன்றி இப்பூவுலகில்? நிகரெதுதானோ!!

பசித்தாலும் பசிதீர்க்க மறந்திருப்பேன்! நீவிழித்திருப்பாய்! - மனம்
துடித்தாலும் என்பதிலுக்காய் காத்திருப்பாய் சேவகனாய்!
புசித்தாலும் அருகமர்ந்துநோக்கி உள்ளம் நிறைந்துபோவாய்! - எறும்பு
கடித்தாலும் பதறிப்போவாயே! அம்ம்ம்ம்மா நீதானேவேறாரோ?

அப்பாவினருமை சொல்லி வளர்த்தாய்! ஆளாக்கினாய்!
எப்போதும் வலியவந்து கரங்கொடுத்தாய்! ஊயிர்வளர்த்தாய்!
தப்பாகநான் காலெடுத்தபோது தன்மையாக முன்வைத்தாய்!
அப்பப்பா அம்மாநீ நடமாடுந் தெய்வமம்மா! வாழியம்மா!

மகனிடமிருந்து..

அன்புள்ள அம்மா!

எனக்காய் நீ அழுவது
எனக்குத் தெரியாமலில்லை!-அப்போ
கணக்காய் நானிணைந்து
களமேகாமலிருந்தால் எம்மை
செருப்பாய் சிங்களவரசு
தரித்தே யிருக்கும்! - மேலும்
நமக்காய் இணைந்தவர் பிரிந்த உயிரும்
வீணாகியிருக்கும்!

வலிதாங்கி துயில்மறந்து காத்தாய் என்னை!
அதுபோல்தானே புலிநாங்கள் எனப்புறப்பட்ட
என்சகாக்கள் தாய்களுமம்மா!

இடிதாங்கி, எங்களினம் துணிந்தேவிட்டார்!
திடமான தீர்மானம் தனைதாங்கி
நம்மினம் நன்றே வாழவேண்டும்! இல்லையா அம்மா?

வாழ்வது ஒருமுறை தானம்மா!
வீணர்கள் கைகளுக்கு விருந்தாக
சாவதில் எனக்கு சம்மதமிருக்கவில்லை!

கொழுந்தாக எரிவதில் இருந்த வேட்கை - அவன்
கையகப்படுதலில் இல்லை அம்மா!

ஊயிர்தனில் ஒட்டிநின்ற தமிழ்ப்பற்றால்
உயிரையே ஈந்திடத் துணிந்தேனம்மா!

அன்புடன் மகன்
மாவீரன்

சுற்று

ஆதவன் அமர்ந்திருக்க அவனியவள் பவனிவர
ஆண்டொன்றின் சுற்று!

அவனியவள் தனைத்தானே அசைந்தே இயக்கிவிட
அந்த நாளொன்றின் சுற்று!

அன்னை! எந்தன் அன்னை எனைச்சுற்றிவர வாழ்த்துகிறேன்
ஏனெனில் இன்று,அவள் அகவையின் சுற்று!

பெண்ணைப் பையன் பின்தொடர்ந்தே பிதற்றுவானே காதலென்று!
என்றைக்கும் இருந்துவரும் சுற்று!

கடலைதனை ஆச்சியவள் காத்திரமாய் அடைத்து தந்தது
சுடலை வரை சுற்றிடுமோ! நினைவுகளின் சுற்று!

இன்பம் என்றும் நிலைப்பதில்லை! துன்பமென்றும் தொடர்வதுமில்லை!
வாழ்க்கையதன் சுற்று!

மானிடரின் வாழ்வதனை நோயணுகாதிருக்க அவசியமே
உடலதனில் உதிரமதன் சுற்று!

நாமுந்தான் மகிழ்ந்திருக்க தமிழதனை தூவிநிற்கும்
லண்டன்தமிழ் வானொலியின் தனிநிகர்சுற்று!

மாதமிரு தடவை தனித்தலைப்பு கொண்டு
காதருகே ஒலிக்குமிது கவிதை நேரச்சுற்று!

உயிருக்கு உறவானாள்!

எத்தனை தரம் கருவானாய்! - என்கவிக்கு!
எந்தனை நீ கருவாகச் சுமந்ததாலே!
அத்தனை சிறப்புக் கொண்டவளே! - வாழியென
வந்தனை செய்கிறேன் நின்னடியை!

எப்போதும் கசந்ததில்லையே உன் அருகாமை!
முப்போதும் முழுநிலவாய் இதம்சேர்ப்பாயே!
தப்பேதும் உன்முன்னே மறைத்துவிட
இப்போதும் முடியவில்லை! மனசாட்சியோ! நீ

அன்பாலே கரம்செதுக்கி, அக்கறையில் சொற்தொடுத்து
பண்பதனை முலாம் பூசி பக்குவத்தை பானகமாக்கி
தென்பாலே நீவிவிட்டு திங்களென ஆறதலொளிவீசி – என்
முன்பாக உள்ளதே என்னுயிருக்கு உறவான தெய்வம்! அம்மா!

11.05.06 லண்டன் வானொலியில் இக்கவிதை

சிந்தித்தால் தெளிவு வரும்

நீநினைத்து அணுகுவதல்ல உனையணுகும் முதுமை!
ஏவர்நினைத்தும் தேய்வதில்லை உடல் வலிமை!
யார்நினைத்துப் பார்ப்பார் இவர்கொள்ளும் கொடுமை!
அதைநினைத்து நீநடந்தால் ஆடிவருமே மனமென்மை!

தசையுறுதி தளர்வதாலே தள்ளாடும் மனிதவுடல்!
விசைகுறைந்து போனாலும் வீச்சு பெறும்மனது!
அசைகின்ற தேராய் தன்மனவடம் கொண்டிழுத்து
மூசுகின்ற மாந்தர்க்கு எத்தனை தாமதங்கள்!

சோம்பலையே சொந்தமாக்கும் சுயநலம் வேண்டாமே!
ஆம்பலைக் கண்டுகளி நிலாவாக தானிலாவிடினும்
பாம்பெனவே சீறுவது சிறுமையன்றோ! சிந்திப்பாயா?
நாம்மனிதர்! நான்குடனீரறிவு நமக்கிருக்கு மறவாதே!

முதுமை கொள்வதோ முடங்கள் ஆவதொன்றும்
இனிமை சொட்டும் விடயமல்ல! இதுநியதி!
கனிவைக் காட்டுவதால் களங்கமில்லை மனிதனே!
புரிவாய்! பரிவாய் கொடுநேசக்கரம்! பெருமைகொள்!

தம்பி சுதாகரனே!

கன்னங்கரியவன்
கள்ளமில்லா சிரிப்பினன்
என்னைவிட ஈரைந்து வயதால் இளையவன்!
தன்னையென் தம்பியாய் தனக்குள் வரித்தவன்!
என்னவானான்?
எங்குதான் போனானவன்?

உதிரத்தில் ஒன்றல்லதான்!
உரிமை எடுத்தவன்!
அதரத்தால் அக்காவென்று அன்பு சொரிந்தவன்!
பதறவெமைவிட்டு பாவி, அப்பாவி எங்கே?!

சிதறும் நினனவுகள்! சிந்திடும் ஏக்கங்களாய்!

மூன்றுவேலிகள் தள்ளியே அவன்வீடு
மூன்றுடன் பிறப்புகள்!
மூன்றாவது பிள்னளயிவன்!
சான்றேதுமில்லையே சரித்திரம் ஆனானோ!
ஆச்சே ஆண்டுகள் பத்து!
ஆண்மகன் அவன்தொலைந்து!

ஓட்டிலே காய்ச்சி ஓலையில் ஊற்றினாலும்
கூட்டிவரும் தோழர்க்கு விருந்து வைப்பாளன்னை!
நாட்டில் வந்ததே பயங்கரம்!
நாசமாச்சே அத்தனையும்!-நெஞ்சில்
பூட்டிவளர்த்த மூத்தமகன் போய்விட்டானே!
போனவிடமேதோ?

கல்விமானில்லை தான்நீ! –அதன்
கனம் தெரிந்த தமிழன்நீ!
கணிதத்தில் பிரியமானவனே
காற்றாகித்தான் போனாயோடா தம்பீ!

துன்பத்தில் துணைநின்றதுன் சொற்கள்
நீந்திவந்த கரையதனில் நீயில்லையடா சுதா!
உன்னைக் காவு கொண்டானரா?
என்னவெல்லாம் நீநினைப்பாயோ?
இன்னும் நீ இருக்கின்றாயா? ஓடிவாடா!

மேடையேற மறுத்தவுன்னை
ஏறவைத்து மகிழ்ந்தோமே!
தேடிவரும் கூட்டங்கள் சிரிக்கவைக்கும் கலைஞனாய்
நாளடைவில் ஆனாயே! தனியிடம் எடுத்தாயே!
நாட்டைவிட்டு வந்தாலும்
நெஞ்சக்கூட்டில் உள்ளதடா உன்னினைவு!

காதலிலே கனவு கண்டாய்!
காதலையுமே காவுகொடுத்தாய்!
பூதலத்திலுள்ளாயா?
போய்த்தான்விட்டாயா?
காணுகின்ற கனவில்கூட
கவலைதோய்ந்தவுன்முகமே தெரியுதடா!

சொட்டுகின்ற மழையிலே
கிட்டுகின்ற பற்களுடன் -ஊர்
விட்டுநாம் கிளாலிபோகையிலே
இருண்டுவிட்ட உந்தன்முகம்!

எப்படியும் கொழும்பு போங்கோ வதனியக்கா
என்றவன் நீகொண்டதுயர்
சட்டியில் கறுப்பாக
ஒட்டிக் கொண்டதையனே! ஓடிவாடா!

கூடிப்பிறக்காவிடினும்
கூடியளவு உதவிநின்றாய்!
கூடப்பிறந்தவள் கலங்குகிறாள்!
தேடவைத்தே நீபோனதென்ன?
உன்னைப் பிரிந்த துயரினிலே
தன்னிளமை தொலைத்ததாலே
இன்னுமுன்னக்காள் இருக்கின்றாள் குமராக!
என்னவெல்லாம் செய்தாயவளுக்கு
இன்னுந்தான் வேகின்றாள் அதைநினைத்து!
என்னாலாற முடியலைன்னா
உன்னக்காள் நிலைதான் சொல்!

உன் சீண்டலில்லை! உன் விமர்சனங்களில்லை!
உன்வீட்டில் மட்டுமல்ல இந்தநிலை - இப்போதும்
நம்நாடடில் காணாதோர் பட்டியலும் நீளுகின்றது!
என்றுதான் இந்தநிலை எங்கள் நாட்டில் மாறிடுமோ?
26.01.2006

விரித்தேன் வலை!

செவிகள் புலன்பெற சிந்தனை செயற்பட
விழிகள் திறக்குமுன் மனதில் ஏக்கம்!
புவியில் பிறந்தவன் எவர்க்கும் என்றுமே
வழியும் எண்ணநுரை ஆகட்டும் நன்னாளென!

காலங்கள் கழியட்டும் ஆகட்டும் கருமங்கள்
கோலங்கள் மனக் கோலங்கள் தீட்டட்டும் - மன
ஆழங்கள் உறைகின்ற வண்ணக் கனவுகள்
நீளட்டும் எம்முன்னே! நீலநதிக் கரைகளெனவென!

கவியென கவலைக் கொப்பினில் பாய்கின்ற மனதை
கவ்வியே இழுத்திட இல்லையே உற்சாகம்!
வலிந்தே விரித்தேன் உதவிவலை! வந்ததுவேகம்!
எலியினைத் துரத்தும் பூனையாய் ஆனேன்அமளியாய்!

காலத்தை செவ்வனே கழிப்பதால் என்னிடம்
மூலமாய் உறைந்த கசப்புகள் மறையுது. – அதன்
மூலமாய் விளைந்தது விறுவிறுப்பு! இதனால்
அனுகூலமாய் விளைவுகள் ஆயிடுமே அறுவடை!

கானல் நீர்

பொறுப்புள்ள தாய், பொறுப்பற்ற தந்தை!
படிப்பை கைவிட்டு சுயதொழில் செய்தம்பி
பிழைப்பிற்காய் வந்தேறு குடும்பம் !
செழிப்புடன துடிப்புள்ள தோகைமயில் !
படிப்பினில் தனியார்வம் கொண்டாளே!

பதினாறு வயதும் வந்தது!
பருவக் காதலும் வந்தது!
படிப்பு முடியுமுன்னரே
பையனும் வெளிநாடேக
பாவையிவள் வாடிப்போனாள்

சக்கரம், காலச்சக்கரச் சுழற்சி
பக்கத்து வீட்டார் பழக்கம்
தத்தையிவள் தனியார்கல்வி
கற்றிட கங்கணங் கொண்டாள்!

என்பிள்ளை எனைப்போல்
எந்நாளும் இடிப்பதா மா?
என்றாவது ஒருநாள்
ஏந்தணும் ஒருகைப்பை
ஏறணுமொரு பதவியில்
என்றவள் அவளம்மா!

இளகியது எனதுமனம்!
இளமயிலாள் இன்முகமும்
வளமனமும் வாஞ்சையுடன்
அழகியவள் வளர்மகளானாள்!

அழகுபார்த்தேன் ஆடைகள்புனைவித்து!
ஆராய்ந்து அறிவித்தேன் புதுப்பாடங்கள்கூட!
அங்கொன்றும் இங்கொன்றும்
அரிசிசேர்ப்பது போல அஞ்சுகம்
அடைந்தாள் உயர்கல்வி!
தங்கமவள் தரத்தாலுயர்ந்ததாலே
திங்களிவளும் மிளிர்ந்துபோனாளே!

அங்கோர் திருமணமாம்
அழகுசேலையணிந்து போனதுதான்
பங்கமென ஆகுமென அறிந்தானா பரமன்?
எங்கிருந்தோ வந்த அவன்
மங்கையிவள் மேற்றொடுத்தான் காதற்கணை!

மாடிவீடு கட்டுவேன்! கோடிச்சேலை கொட்டுவேன்!
தேடிவந்தால் தேவதை தேவைகள் தீர்ப்பேனே!
நாடிவந்த சுற்றம் கூட்டி
மூடிதனை விலக்கிக் கற்றை நோட்டுகாட்டி
பாடிநின்றான் தன்புகழ்! மனங் கவன்றான்!
இயம்பிநின்ற பசப்பு வார்த்தையால்
மங்கையிவள் மயங்கிப்போனாள்!

காதலல்ல காரணம்
காசுதான் காரணமென
பூதலத்தில் பூரித்திருக்க
காரிகை நினைத்தாளோ!
தாயவள் தான் தன்னை
தாரைவார்க்க நினைப்பதாய்
சூசகமாய் பொய்புனைந்து
போட்டாளே வேடமதால்
உடைத்தாளே கனவுக்கலசத்தை!

பட்டதெல்லாம் போச்சு
பழகியதெல்லாம் ஆச்சு வீணே

எனது வீடு

ஊரெலாம் அடங்கி உள்ளம் பேசுமே-அப்போ
ஆறவமர்ந்து அவள்நிலாவினழகைப் பருகிட்ட
சாலஅமர்ந்திருக்கும் நடுமுற்றம்!

அடிக்கின்ற மழையினில் அத்தனை சருகுகளும்
அள்ளிச்செல்லும் நீரிலே அழகுத்தோணி
ஆடிச்சென்றிட்ட நாலபக்கநீரும் கலக்கும் தாழ்வாரம்!

முற்றத்து அம்பலவி மாமரம்! - என்
சித்தப்பனை பலிகொண்ட ஆழக்கிணறு!
எட்டத்திலேயே தன்னிருக்கை தெரிவிக்கும் மல்லிகை!

தானிலாவிடினும் தன்சந்ததி இனித்துட்கொள்ளவென
எந்தை நாட்டிவைத்த எட்டிப்பறிக்கும் விதமாயமை
தேனென இளநீர் தருந்தென்னை!

அன்பு அப்பா அண்ணன்மார் அங்கிருந்தகன்று
அகதிகளாய், ஐரோப்பா போனபின்னும் -நாளும்
அங்காடி சென்று கொணர்ந்த அம்மா
ஆக்கித்தந்த கொழும்புத்துறை மீன்
ஊரரிசிச் சோறு, உடன் மரக்கறி!

நாளெலாம் பாடுபட்டு நயமாக அப்பந்தோசைசுட்டு
ஊரெல்லாம் உறங்கியபின்னர் பக்கவேலிவழிவந்து
வீடெலாம் பூட்டித்துாங்கியவெமை எழுப்பித்
தாராளமாய் அம்மாவிடம்திட்டு வாங்குமன்புச் சிறியதாயார்!

ஆக்கியவுணவை அப்படியே தட்டில் போட்டு
ஆகிவிட்டதாவெனது ஆகாரமென அறிந்து
என்னுடனே இணைந்துண்ணத் துடிக்கும்
அன்பு அப்பாவுடன் பிறப்பு 'சின்னமாமி'

சுவைநிறை பலகனிகள்! சுகங்கொடுக்கும் நன்காற்று!
நரைநிறந்த போதினிலும் வீறாப்பு பேசிநிற்கும்,
எமையீந்தவளை இவ்வுலகுக்களித்த அம்மம்மா!

எப்போது இருப்பேன் ஏதும்சோலி இல்லாது
அப்போது அன்பாலே கட்டிப்போட
தப்பாது துடிக்கும் அன்பு உள்ளங்கள்! - மற்றும்
முப்போதும் உடனிருக்க விரும்பும் மாமிபிள்ளைகள்!

நான்தவழ்ந்து, நான்நடந்து ஓடிவிளையாடி மகிழ்வு!
காலச்சக்கரத்தின் சுழற்சி! கோரத்தின் பிடியில்யான்!
சாலச்சக்கரத்தில் உழலவேண்டி ஒப்பமைத்த சாய்தளங்கள்!

நான்சென்று காணமுடியா விழாக்களை ஊர்திரண்டு
வீடுவந்து களித்திட ஆண்டுக்கொரு தடவை
மேடையமைத்தே நடாத்திட உதவிய முன்முற்றம்!

வகைதெரியா அன்புவம்புகள்! இதஞ்சேர்க்கும் வானொலி!
அதைரசிக்க என்னருகமர்ந்திருக்கும் அன்பர் குழாம்!
அதற்காகவே வீட்டுப்புறத்தே அமைந்த கூடாரம்!

நேரத்தை நேர்த்தியாய்ச் செலவு செய்யப்பல
பாடத்தைப் புகட்டியே நாளும் பலர்மனப்
பாரத்தை இறக்கி யானும் ஆதாயமீட்டிய
என்றாயின் பெயரிலியக்கிய சரஸ்வதி கலையகம்!

ஏறிவிட்ட வியாதியாலே மாறிவிட்டவென் வாழ்வினிலே
பாறிவிட்ட மரமென சிறைப்பட்ட போழ்தினிலும்
ஆறுதலாய்த் தாயென எனைத்தாங்கியணை எனதுநாலுசார்வீடு!

இனப்படு கொலை

ஆழிக்கடல் தாண்டித்தான் வந்துவிட்டோம் - ஆயினும்
மூழ்கித்தவிக்கும் எங்கள் மனங்கள் துக்கத்திலே!
ஊழ்வினையோ, இல்லை எதிரியின் இறுதிஇழிநிலையோ
பாழ்பட்டுப் போனவரின் பாரிய வெறியாட்டம் ஐயகோ!

தூக்கத்தில் உள்ளோரை துப்பாக்கியால் துளைத்தார்!
தேக்கமரத் தேகம் பார்த்தே தசைதசையாய் தகர்த்தார்!
காக்கின்றவுடை தரித்தே காகிதமெனவாழ்வைக் கிழித்தார்!
நோக்கமே நரவெறியாய் மூர்க்கவேட்டை கொண்டாரே!

செப்படிவித்தையென பேச்சுவார்த்தை காட்டிநின்றாரே!
பற்படிதாண்டிவிட்டோம் பாவியிவர்கள் பசப்புகளில்!
இப்படியே போனால் எம்தமிழர் நிலைதான் என்னாகுமோ
எப்படியும் நாம்எடுக்க வேண்டும் உடன்நடவடிக்கை!

ஏரிட்டுவாழ்ந்த நம்தமிழர் எடுத்துவிட்ட துப்பாக்கி
போரிட்டே வெல்ல வேண்டிய பொல்லாத சூழலிது
கூறிட்டே ஆகவேண்டும் இலங்கை தேசம்! - அதைக்
கூறிட்டே போகின்றது சிங்களப்படை இனப்படுகொலைகள்!

துமிழர்நாம் கலங்குவதால் தாயகம் துலங்காது! - துன்பத்தில்
அமிழும் நம்மவர்க்காய் அணிதிரண்டு குரல்கொடுப்போமே!
பணிகள் பலசெய்தும் பணந்தான் சேர்ப்போமே!
மணிகள், நம்மணிகள் தமக்கு அணிசேர்ப்போமே!

அனைத்துலக வானொலி 17.05.06

அப்பாவுக்காக

அக்கறை தன்விலாசம் கேட்டது
அதுதொலைந்து ஆண்டுகள் மூன்றாச்சே
அடிமனம் சொன்னது.

துணிவை அடித்துப் போனது பிரிவலை!
துணிந்து உள்நுழைந்தது துக்கபட்சி
பணிந்து வாழணுமோ!
அச்சம் எட்டிப் பார்த்தது!

காய்ப்பதும் கனிவதும்
பூப்பதும் பொய்ப்பதும்
ஆட்களின் கைகளிலில்லையே!

ஆதலால் அன்பொன்று மட்டுமே
பூதலத்திலுள்ள வரை பெருமைதரும் !
போதித்துச் சென்றாரோ!
பூசிக்கிறேன் எந்தையே!
நேசிக்கிறேன் நீங்கள் பிறந்தநாளை!

பாசத்துடன் உங்கள் கடைக்குட்டி

13.07.06 இலண்டன் வானொலியில் வாசித்த கவிதை

எழுதுகோல்

ஏழைவீட்டிலும் மாடிவீட்டிலும் இயல்பு வலம்வருவாய்!
கோழையென்ன வீரனென்ன கொள்கைளை கொட்டிவிட
நாளும்நீ உழைப்பாய்! நயமாய் நர்த்தனம்புரிவாய்!
ஆளுகின்ற உணர்வுகளை அழகாயும் உரைப்பாய்!

காசினியில் காணுகின்ற கண்குளிர் காட்சிமுதல்
மாசதனையும் மற்றவர்முன் மழுங்காமல் காட்டி
தேசமதன் சந்துபொந்து நடப்பனவும் தேடி
பூசலையே சாகசமாய் சூசகமாய் உரைப்பாயே!

கன்னியரை மனைவியாக்கும் காதலனின் முதற்காதலிநீ! – தன்
கன்னியவள் மற்றவரின் மனைவியான சேதிகேட்டு
கண்ணிமைக்க மறந்த காதலனின் கடைசிவரை
கண்ணிமையாய்க் கண்ணீர் கனதிசிந்தவைப்பாயே!

உனையுரசி மடலவளும் உதிர்ப்பாள் பலமலர்கள்
தனையலசி கவிஞனவன் கவிதைகளைக் கனர்வான்!
முனையதனை முட்டுவதால் மோதிவருமே உணர்வலைகள்
தனைக்குனித்து பலமாந்தர் தலைநிமிர்த்தும் எழுதுகோலே!

வாழ்வோமே வளமாக

நாடுகள் கடந்து வந்தோம். நல்லவை நாடிநிற்போம்.
பாடுகள் சுமந்து நாமும் பலரையும் காத்து நிற்போம்.
ஏடுகள் பலவும் காட்டும் எத்தனம் பல முனைவோம்
கூடுகள் விட்டு எம்மாவி போகுமுன் ஆக்கிநிற்போம்!

ஆசைகள் கொள்வதில் பாபமில்லை – அதனால்
பாசங்களைப் பிரிக்க வேண்டாமே! –அவனியில்
நாசங்கள் நாம்செய்வதாலே நாசமே நிம்மதியில்
பேசுங்கள் உங்களுள்ளே! பெருமைகொள் வாழ்வேயாகும்

ஒருவரை ஒருவர் சார்ந்ததே மனிதவலை அதனால்
உதவிகள் பெறுவதொன்றும் தப்பில்லை – அதற்காய்
ஒருவரைச் சுரண்டி யாரும் வாழ்வது நீதியல்ல! நாமும்
உதவுவோமே வலிந்து! உவகையே மிஞ்சும் பாரீர்!

இளமை கரைந்துபோயிட முதுமை முதுகைத் தட்டிட
இனிமை தரவல்லது அன்பொன்று மட்டுமே, நாமும்
வழமையாய்க் கடமைகள் செய்து மகிழ்வதை பெறுவதற்கு
செழுமையாய் வாழ தேவையே நிதானம் கேளீர்!

27.07.06 லண்டன கவிதை நேரத்துக்காக

காலம் கரைகிறதே!

கதிரவன் துயிலெழுப்ப காலமகள் கண்திறக்க
மதிநிறை மனிதனவன் வாழ்வுத் தேரோட்டம்!
உதிரமதன் ஓட்டத்தில் ஓசோனின் நடமாட்டம்!
அதிரவைக்கும் ஆக்கங்கள் அவன் செயலாக்கம்!

பாடசாலை, வேலையென ஓடுகின்ற மாந்தர்கள்
கூடுசேர்ந்த பறவைகளால் தேடிவந்த விடுமுறையில்
நீட்டிநிமிர்ந்து தூங்குவதில் அதிகாலை மயக்கங்கள்!
ஈடுகட்டமுடியா இழப்பினிலே நேரமதன் முதலீடுகள்!

இளமைவருமா மனிதா? இன்னுமேன் சிந்திக்கமறந்தாய்!
இனிமைவருமா உள்ளத்தில் முதுமையதில், மறந்தாய்!
பதியமிடா முயற்சிகள்! முன்னேறநீ மறுதலித்தாய்!
புனிதமான வாழ்வின் பொழுதை வீணடிக்கின்றாய்!

காலம் கரைகிறதே கடமைதனைச் செய்வோமே!
ஞாலச் சுழற்சியிலே வெற்றிதனை பெறுவோமே!
நாளம் நாடியெல்லாம் நன்னினைவு கொள்வோமே!
சாலச் சிறந்தவழி சாதனைகள் புரிவோமே!

சாதனை

உற்சாக உள்மனம், ஒருமனதாய்ப் பாடுபடு!
முற்றாக கரிசனம், முடிவான எண்ணம்
பற்றான அணுகுமுறை பரிவான வெளிப்பாடு
வற்றாத நதிபோல வாய்ப்புகள் வலம்வருமே!

மனமே! மயங்காதே மடிந்து தான் யோகாதே
உனதே கையில் சாதனைகள்! ஒருநாளும் கலங்காதே!
உடலே! அயராதே உள்ளவரை உழைக்கத்துணி!
உன் வீடு தேடியோடி வரும் உவகை நிறை சாதனைகள்!

முற்றாகக் கரிசனம் கொள்! முழுமூச்சாய்ப் பற்றுதல் கொள்!
முழுமதியாய் முன்னே வரும் முழுதாகவுன்முன் சாதனைகள்!
முடிவான திட்ட மிடு! முடிவாக எல்லை வரை!
கடிதாக இருப்பினுமுன் அடிபணியும் நன் சாதனைகள்!

பற்றுடனே பயிற்சி செய்! பகலிரவும் படம்வரை யுன்மனதில்
வற்றாக நதி போல வாய்ப்புவரும் வசீகரி, வளம்பெறு சாதனைகள்!
வளர்ந்தாலும் பணிவு கொள் வளர்ச்சியிலும் நிறைவு கொள்!
உளஞ்சோரா உறுதி கொள் உனைச்சேரும் உன்னத சாதனைகள்!

சிவம் பரமலிங்கம்

உதயகுமாரி (நிலா)

எந்தையும் யானும்

அமரர் சிவஞானம் பரமலிங்கம் அவர்கள் காலமாகி மூன்று வருடங்களாகின்றன எழுதுவியைஞராகப் பல இலாக்காக்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற இவர் இருபது வருடங்களாக இலண்டனில் வாழ்ந்தார் அப்போது அவர் லண்டன் கனடா பத்திரிகைகளுக்கும் பல ஆக்கங்களைத் தந்துள்ளதுடன் சன்ரைஸ் வானொலிக்கும் தவறாது எழுதிவந்தவர்.

இவரது மகள் உதயகுமாரி வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவி இங்கிலாந்தில் கணணிவலை பொறியல் துறையில் லண்டன் மிடில்ஸக்ஸ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்.

நிலா அரியானையூர் அம்புயம் என்று புனைபெயர்களைக் கொண்ட இவர் இலங்கையில் தனியார் கல்வி நிறுவன நிர்வாகியாகத் திகழ்ந்ததோடு பதினைந்த்துக்கும் மேற்பட்ட நாடகங்களை இயக்கியுள்ளார். தினமுரசு பத்திரிகை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பவற்றிலும் புலம்பெயர்ந்து சன்ரைஸ் லண்டன் தமிழ் வானொலி ரீ.ஆர்.ரீ வானொலிகளிலும், தீபம், வீ.ஐ.ரீவி யிலும் பங்கேற்று வருவதோடு நிலாமுற்றம் என்ற இணையதளத்தையும் திறம்பட நடத்தி வருகிறார்.

Cell : +919443743305, India